In the 2nd chapter is explained the ancient condition of the people in the Tamil land. The name of the people followed the land or tract they occupied. The land is divided into five divisions or *tinai* (திணை) called *marutham* (irrigated country), *mullai* (forest land), *kurinji*, (hilly country), *palai* (sandy desert) and *neithal* (seaboard); and the names of the dwellers of these tracts were respectively *mallan* or *pallan* or *uzavan* (cultivator), *idaiyan* (shepherd), *kuravan*, *maravan*, and *paravan*; and their callings, practices and usages &c. were in a sense different, yet there was no barrier for one man of one tract settling in another and intermingling with the people of the new territory. And he instances how Jivaka (in the famous Tamil Epic *Jivaka Chintamani*) travelled about and married wives in different parts of the land. All were regarded as equals, and no distinctions existed among them till, at a later and more civilized time, the distinctions of higher and lower, as Mudaliar, Idayar and Kadaiyar came into existence. The people from the north were solely responsible for introducing the distinctions of Brahman &c., and we find poet Kabilar, himself born of Brahman parents, charging his people in his famous *Agaval* (*vide* the translation of Rev. Dr. G. U. Pope, in the *Sidhanta Deepika*), with being responsible for such introduction in the Tamil land: "நாற்குலச்சாதி யிந்நாட்டில் நீர் நாட்டினீர்."

In the 3rd chapter, it is shown that the Aryan settlers did intermarry for a time with the people of the Tâmil land and there was greater intercourse and commerce between the two peoples, and as I have shown above, they had identified themselves with each other; but later on they became more exclusive, and by giving up meat and drink, they raised themselves much more in the estimation of the people, as even to-day some non-Brahmans try to raise themselves; and the much despised *Kali* age is much more responsible for the social elevation of the Aryans than the other *yugams*.

In this connection, it is pointed out that *adi* Saiva Brahman Gurukkals would, in all probability, have

belonged to the original Tamil stock, and it became crystallized into a separate caste, when the divisions of the people following professions became more and more crystallized. In this connection, I may quote the following passage from *Pattinappalai*,* the oldest of the *Patthu-pattu (ten idyls), where under the title of Vellalahs are described cultivators, traders and cowherds.*

"கொலை கடிந்துங் களவு நீக்கியும்
அமரர்ப்பேணியும் ஆவுதியருத்தியும்
நல்லானொடு பகடோம்பியும்
நான்மறையோர் புகழ்பரப்பியும்
பண்ணியமட்டியும் பசும்பதங்கொடுத்தும்
புண்ணியமுட்டாத் தண்ணிழல் வாழ்க்கைக்
கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைபடாது
பல்பண்டம் பகர்ந்துவீசுந்
தொல்கொண்டித் துவன்றிருக்கை."

In the fourth chapter, the writer divides caste into natural and artificial. The division into Negroes and Chinese would illustrate the first division—the ethnological one. The artificial division into Brahman etc. exists in India alone. Whatever distinction existed in the beginning between the Tamils and the Aryans, they were all wiped out by ages of intermingling between the two races; and now no ethnic difference can be perceived between the two races. And he quotes from Dr. Bhandarkar, that caste was even a later introduction in the Aryan polity. And in conclusion, he points out the iniquity of preserving

* The best critique of this Idyl is by Pandit R. S. Vedachalam Pillai of the Christian College, Madras.

such caste distinctions, which has resulted at least in driving the lower castes in Hindu society to seek the cloak of other religions to better their social prospects.

I have barely indicated the main points discussed in these pages, and it will not be possible to go into all the matters in a bare introduction, and I hope my friend Mr. V. P. Subrahmania Mudeliar would bring out an English translation in due course. And I have every hope that these pages will tend to stimulate healthy enquiry and research into the dark pages in the history of our ancient mother-land.

CUDDALORE, N. T.
15th March, 1908.

J. M. NALLASWAMY.

இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்தியா சாதி வரலாறும்.*

——o——

முன்னுரை.

திருவனந்தபுரம் மஹாராஜா காலேஜ் புரோபெஸர் பி. சுந்தரம்பிள்ளை, எம்.ஏ., இங்கிலீஷிலும் தமிழிலும் ஒருங்கே பாண்டித்தியமுள்ள மிகச் சிலருட் சிறந்தோரொருவரென்பதும், ஆங்கில இலக்கியங்கள், சாஸ்திரங்கள் இவைகளிற் பயிற்சியுள்ள தமிழ்விற்பன்னரை விசேடமாக மகிழ்வித்து அத்துவித தத்துவக் கருத்துகளை ஒருபுடை விளக்கும் மனோன்மணியம், நூற்றொகை விளக்கம் முதலிய சில தமிழ் நூல்களுக்கு ஆசிரியரென்பதும், ஷை மகாராஜா கல்லூரியில் தத்துவ சாஸ்திர பட்டாசாரிய (Phillosophy Professor)ராகவிற்றிருந்தனரென்பதும், தமக்கமைந்த ஒழிவுகாலங்களில் செய்யும் முயற்சிகளுள் பூர்வ சரித்திர ஆராய்ச்சியே பிரதான முயற்சியாகக் கொண்டு அதற்காக நெடுங்காலம் உழைத்துத் திருஞான சம்பந்தர் காலநிர்ணயம் முதலிய சரித்திர சம்பந்தமான சில உண்மைகளை நூதனமாகக் கண்டுபிடித்து அவைகளை இனிது விளக்கி நிலை நிறுத்தியதனால், அத்தகைய உண்மைகளின் அருமையறிந்த ஐரோப்பிய சங்கத்தார்களால் கவுரவமாக வழங்கப் பெற்ற பல பட்டப்பெயர்கள் பூண்டு தென்னிந்தியாவுக்கோர் அருமையான ஆபரணமாக விளங்கினரென்பதும் பலர் அறிவர்.

அவர் அவ்வாறு புராதன சரித விசாரஞ் செய்து வருங்கால் கண்டுபிடித்த உண்மைகளுள் வெளிப்படுத்தியவை போக எஞ்சிய

---

*இது, முதலில், தக்ஷண தீபத்தில் சுரோதா என்ற பெயரின் கீழ் பிரசரிக்கப்பட்டது; இப்பொழுது சில கூட்டல் மாற்றல்களுடன் இங்கு வெளியிடப்படுகின்றது.

உண்மைகள் பல உள. அவைகளைத் தமது மனதுக்குத் திருத்தியாகவும் பூரணமாகவும் அறிந்துகொண்டு ஏனையோர்க்கு எளிதாகவும் இனிதாகவும் விளங்குமாறு வேண்டுவன சேர்த்து முறைப்படுத்தி யெழுதி வெளிப்படுத்த உத்தேசித் திருந்தனர். தென்னிந்தியா செய்த தவக்குறையால் அவ்வுத்தேசங்களை நிறைவேற்றுமுன் காலஞ் சென்றனர். அவ்வாறு வெளிப்படாத உண்மைகளுள் யானிப்போது வெளியிட மேற்கொண்ட இராமாயண உள்ளுறைபொருள் என்பதனுள் அடங்கியவை சிலவே. இவை தவிர வெளிவராதுள்ள உண்மைகள் அவருடைய குறிப்புப் புத்தகங்களிலும், நேசருக் கெழுதிய நிருபங்களிலும் அப்போதப்போது சம்பாஷித்த சம்பாஷணைகளைக் கேட்டுள்ளோர் ஞாபகத்திலும் அகப்படும். அவைகளைத் திரட்டி அவரது நண்பர் யாவராயினும்பிரசித்தப் படுத்துவா ராஞல் தென்னிந்தியாவுக்கு மிக்க பேருபகாரமாம்.

அவர் தேக வியோக மாதற்குச் சில வருடங்களுக்கு முன் சென்னையில் வந்திருந்த காலத்தில், தமது நண்பர் சிலரோடு சல்லாபித்துக் கொண்டிருந்த ஒரு சமயத்தில் யானுங் கூடவிருக்கும்படி வாய்ந்தது. அப்போது இராமாயணத்தைப்பற்றிப் பிரஸ்தாபம் உண்டாக, அந்நூலை குறித்து அவர் கொண்டிருந்த கொள்கைகள் என்னையோவென ஒரு நண்பர் வினவினர். அவ்விஞவுக்கு விடையாக அவர் வெளியிட்ட கருத்துகளை ஆதாரமாகக்கொண்டு இவ் இராமாயண உள்ளுறை பொருள் எழுதப்பட்டது. அவர் தங் கருத்துகளைக் கூறிய வகையும் முறையும் இனியனவாகவும் எளிதுபொருள் விளக்குவனவாகவும் கேட்டோர் உள்ளங்களிற் பசுமரத்தாணிபோற் பதிவனவாகவும் இருந்தன. இப்பொழுது இஃது எழுதும் யானே பூர்வசரித்திர ஆராய்ச்சிக்குரிய சாசன சர்ச்சை முதலியன ஒன்றும் அறியாதேன். அவர் கூறிய கொள்கைகளோ அம் முறைகளை நன்குணர்ந்தார்க்கே முற்றும் புலப்படற் பாலன. அவரே அக்கொள்கைகளை எழுதியிருப்பின் மிக நன்ருக விருக்கும். அம்முறைகளை யறிந்த அவர் நண்பர் யாவரா

யினு மொருவர் அவைகளை வெளிப்படுத்தி யிருப்பினும் அதற் கடுத்த பக்ஷம் நன்றாக விருக்கும். இவ்விரு வழிகளுள் யாதாயினு மொருவழியாக அக்கொள்கைகள் வெளிவருமென்று இதுவரை யும் எதிர்பார்த் திருந்தேன். அவ்வாறு வெளிவராமையாலும், அக்கொள்கைகளில் அடங்கியுள்ள அரிய கருத்துகள் உலகத்தா ருக்குப் பயன்படாமல் இறந்து விடலாகாதே யென்ற பயத்தினு லும் யான் இதனை எழுதத் துணிந்தேன். பூர்வ சரித்திர ஆராய்ச் சி வல்லார் இதனில் காணலாகும் "குற்றங் களைந்து குறை பெய்து" வாசிப்பாராக. அக்குற்றங் குறைகள் என்னுடையவை களாகவே கருதப்பட வேண்டுமென்பதும், இதில் ஆக்ஷேபனைக் கிடமானவைகள் உளவாயின், அவைகளைத் தெரிவித்தற்கும் அவற்றிற்குச் சமாதானங்கூறுதற்கும் உரியார் பழஞ் சரித்திர வாணரே யென்பதும் சொல்லாமலே அமையும்.

வே. ப. சுப்பிரமணியன்.

முகவுரை.

இராமாயணம் என்பது, இன்னார் இன்ன பாஷையில் இயற் றியதென விசேடித்துக் கூறுதவிடத்து, பல பாஷா வித்வான் கள் தத்தம் பாஷைகளில் இயற்றியுள்ள இராமாயணங்களொன் றனையுங் குறியாது, வான்மீக முனிவரது வடமொழி இராமா யணத்தையே குறிக்கும். ஏனைய இராமாயணங்களைக் குறிப்பி னும் அவைகள் அவ்வான்மீக இராமாயணத்தையே பின்பற்றிய சார்புநூல்களாதலால் இங்குக் கூறப்படும் கொள்கைகள் பாதிக் கப்பட மாட்டா. அக்கொள்கைகளை வெளியிடுமுன் நான் தெரி வித்துக்கொள்ள வேண்டிய சில விஷயங்களுண்டு. அவைகளை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மதாபிமானத்தில் நான் யாருக்கும் பிற்பட்டேனல்லேன். நான் சொல்லப் போகின்றவற் றுட் சில மதவிரோதமானவைகளாகச் சிலருக்குத் தோன்றலாம். அவ்வாறு தோன்றினும் அவைகள் உண்மையாக மத விரோத

மானவைக ளல்ல. ஆயினும், அவைகள் சாதி விஷயமாக நாம் பரம் பரையாகக் கொண்டிருக்கும் சில தப்பு நம்பிக்கைகளுக்கு மாறு பட்டிருக்கும். தப்புகள் தப்பென விளக்கப்படுவதற்காக யாரும் விசனிக்க வேண்டிய தில்லை. சாதியும் சமயமும் அவசியமாகச் சம்பந்த முள்ளவைகளா யிருக்க வேண்டு மென்ப தில்லை. சீனரும் ஜப்பானியரும் இரண்டு ஜாதியாராகவும், ஒரே சமயத் தினராகவு மிருக்கின்றனர். ஆங்கிலேயர், ஜெர்மனியர் முதலிய பல ஐரோப்பிய ஜாதியார் ஒரே சமயத்தினர். ஒரே சாதியா ருள் ஒரு வகுப்பார் ஒரு சமயத்தின ராகவும், வேறொரு வகுப் பார் மற்றொரு சமயத்தின ராகவும் இருக்கின்றனர். ஆதலால் ஒரு சாதியை பற்றிய கொள்கைகள் தப்பானவை யென்று ரூபிக் கப்பட்ட போது, அச்சாதியின் சமயத்தைப் பற்றிய கொள்கைக ளும் தப்பாக வேண்டிய ஆவசியக மில்லை. நான் இப்போது வெளி யிடப் புகுந்த இராமாயணத்தைப் பற்றிய கொள்கைகளுக்குச் சமயத்தைப்பற்றி விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. சாதியைப் பற்றிய விசாரணை இன்றி யமையாதது. அக்கொள்கைகளும் தென்னிந்திய சாதி நிலைமையும் ஒன்றை யொன்று சார்ந்திருத்த லால் நான் கூறுவதை இராமாயணகாலத்திலும், அதற்கு முற் காலத்திலும் பிற்காலத்திலும் இருந்த தென்னிந்தியா சாதி நிலை மைகள் என்று மூன்றுபிறிவுகளாக வகுத்துக் கூறுகின்றேன்.

இராமாயண உள்ளுறை பொருளும்

தென்னிந்தியா சாதி வரலாறும்.

முதல் அதிகாரம்.

இராமாயண காலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை.

இராமாயணமும் பாரதமும் இதிகாசங்களென்று கூறப்படுகின்றன. இவ்விரண்டுள், பாரதம் உண்மையாக நடந்த சரித்திரத்தை ஆதாரமாகக்கொண்டு அச்சரித்திரத்தை கூட்டியும் குறைத்தும் மாற்றியும் பலபடப் புனைந்தும் கூறும் நூலென்று பூர்வ சரித்திர ஆராய்ச்சி வல்லார் கூறுகின்றனர். அவர்கள், இராமாயணம் அப்படிப்பட்டதொரு நூல் அன்றென்றும், அதற்கு ஆதாரமாக உண்மையான சரித்திரம் யாதொன்றும் இருந்ததாகக் காணப்படவில்லை யென்றும், அதில் பிரதானமாகக் கூறப்பட்ட சீதை, ராமன் என்ற பதங்கள் வேதத்தில் முறையே படைச்சால், நீர் என்று பொருள்பட ஒரோவிடத்து வருகின்றன வென்றும், ஆரியர் என்ற பதத்தின் மூலப்பொருள் ஏருடையா ரென்றும், அவ் ஏருடையா ரென்னும் பேருடையார் முன் காடுகளாக விருந்த இடங்களை உழுது, படைச்சால்களாக்கி, நீர் பாய்ச்சிப், பயிருண்டாக்கி, நாடுகளாக்கி, ஆரிய நாகரீகத்தைப் பரவச் செய்ததை அந்நூல் குறிப்பாக உணர்த்தி, அவ்வாரியர்கள் வடக்கேயிருந்து பூர்வ குடிகளைச்செயித்துக்கொண்டு தென்னிந்தியாவைக் கடந்து இலங்கை வரை ஜெயசாலிகளாகச் சென்று இராச்சிய ஸ்தாபனங்கள் செய்ததை வெளிப்படையாகப் புலப்படுத்துகிறதென்றும், அதனால் அது ஆரியரது வீரத்தையும் வெற்றியையும் மேம்படுத்த ஆரிய கவி யொருவர் பல கற்பனை அலங்காரங்களோடு நவரசமும்

மலியப் புனைந்து கட்டியதோர் கற்பிதக்கதை யென்றும் கூறுகின்றனர். அப்படியானல், வான்மீக ராமாயணம் ஆரியகவி யொருவர் தமது சாதி வீரரது விஜயப் பிரதாபத்தை வியந்து கூறுவதாம்.

அந்நூலில் கூறும்* ஆரியரது குற்றங்கள் அக்கவியால்ஒப்புக் கொள்ளப்பட்டதனல், ஆரியர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டு அவைகள் உண்மையானவைக ளென்பதற்கு வேறுசாட்சியம் வேண்டாதவைகள். அதிற் கூறும் †அநாரியரது குணங்களும் ஆரியராகிய எதிரிகளால் வியந்து பாராட்டப் பெற்ற காரணம் பற்றி உண்மையானவைகளென்று நிலைநாட்டப் பட்டவைகள். அவ்வநாரியர் யாரெனின்: வாலி முதலான தென்னிந்திய வாசிகளும் இராவணன் ஆதி இலங்கை வாசிகளுமாம். வாலி சுக்கிரீவ ஆதியர் குரங்குகளென்று ஆரியகவியால் கூறப்பட்டிருந்தாலும், அவர்கள் அவ்வாரியரைப் போலவே, கடவுளால் மனிதராகப் படைக்கப் பட்டிருந்தவர்களே. இராவணதியர் இராக்கதரென்று கூறப்பட்டிருந்தாலும் அவர்களும் ஆரியரைப்போல மனிதரே. இவ்விரு வகுப்பு மனிதரும் நமது முன்னோராகிய திராவிடரே.

அத்திராவிடருள் சிறந்தோராக விருந்தோர் சிலரைக் கூறி அவர்கள் குற்றங்களையும் கூறி, அக்குற்றங்களுக்காக இராமன் அவர்களோடு போர் புரிந்து வெற்றிகொண்டு அவர்கள் இராச்சியங்களைக் கவர்ந்து, தனக்கு உதவிசெய்த திராவிட இளவரசனைத் தன் கீழ்ச் சிற்றரசராக்கி அவருக்குத் தான் கைப்பற்றிய இராச்

* ஆரியர் என்ற பதம் இப்பரத கண்டத்தில் வைதீக மதப் பிரவர்த்தக ராயுள்ள சகல ஜாதிகளுக்கும் பொதுப் பெயராகப் புராண, இதிகாச, காவியங்களில் வழங்கினும், சரித்திர ஆராய்ச்சி முறையில், அச்சொல் தென்னிந்தியாவிற் குடியேறிய பிராமணரை யுள்ளிட்டு வடஇந்தியாவி லுள்ள பல சாதியார்க் குரிய குறி யீடாம்.

† அநாரியர் = ஆரியரல்லாத பிறசாதியார்.

சியங்களை அளித்ததாக வான்மீகம் கூறுகின்றது. த்திராவிடர் களுள் குற்றம் செய்தார் யாவர்? அவர்கள் செய்த குற்றங்கள் எவை? அவர்களைச் செயித்த வழிகள் எத்தன்மைய? என்று விசாரிப்பாம்.

I. குற்றஞ் செய்தாருள் முக்கியமானவர்:—

i. இராவணன்.

ii. வாலி.

II. குற்றங்களுள் முக்கியமானவை:—

i. இராவணனுடைய குற்றங்கள்:

(1) தேவரை வென்று சிறையிட்டது.

(2) முனிவருக்கு இடையூறு இயற்றியது.

(3) சீதையைக் கவர்ந்து சிறை வைத்தது.

ii. வாலியினுடைய குற்றங்கள்:

(1) சுக்கிரீவனை ராச்சியத்தினின்று துரத்தியது.

(2) அவன் மனைவியைக் கவர்ந்தது.

III. செயித்தவழிகள்: பின்னர்க் கூறப்படும்.

I. குற்றஞ்செய்தோர்.

i. இராவணன் வேதசாஸ்திர விற்பன்னன்; சிறந்த கல்வி மான்; மஹாவீரன; தீரன்; தன் புயவலியினால் அநேக இராச் சியங்களைக் கைப்பற்றியவன்; அகோர தவஞ் செய்து பிரபல வரபலம் பெற்றவன்; சங்கீத வித்துவ சிகாமணி; பந்து மித்திரர் களையும் தன் கீழ் வாழ்ந்த குடிகளையும் ஆதரித்தவன், என்று இங்ஙனம் பலவாறாகப் புகழ் பெற்றவன். அவனுக்குப் *பத் துத்தலையும் இருபதுகையும் இருந்தன வென்று கூறியது அவன்

* ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களில் ஆழமாகத் தோண்டிய சிலஇடங்களில் யானையிலும் மிகப்பெரிய காத்திரமு ள்ள "மாமத்" என்ற மிருகங்களின் எலும்புகளும் ஆடுமாடுகளை யும் விழுங்கும் பெரும்பாம்பு (Boa Constrictor)களைக்காட்டி

அறிவின் சிறப்பையும் வலியின் மிகுதியையும் குறிப்பித்தற்கே. இது போல இயற்கைக்கு விரோதமாகக் கூறப்பட்டவைகள் எல்லாவற்றையும் அதிசய அலங்காரமாகவும் 'உபசாரவழக்காகவும் கொண்டு உண்மையை உய்த்துணர்தல்' வேண்டும்.

ii. மேற்கூறிய சிறப்பையுடைய இராவணனைச் செயித்த தொன்றே வாலியின் அபாரவீரத்தை விளக்கப் போதும். இவன் சிவபூஜாதுரந்தரன்; தந்தைசொற்றவறாமை, சகோதரவாஞ்சை, பத்தினிவிரதம், பக்தபரிபாலனம், அஞ்சாவீரம், அதிசயசினேகம், சொற்பிறழாமை, சுவபரித்திபாகம், என்றவை முதலிய சிறந்த சீலங்கள் பகைவரிடத்துக்காணப்படினும், அவர்பால் இதயமும் என்பும் ஒக்க நெக்குருகி அன்பு மயமாகிவிடும் இயல்பினன் என்பது, தனது சுதேச, சுசாதி விரோதியாகிய இராமனைப்

லும் மிகப்பெரிய ஊநம்செந்துக்களின் எலுபுகளும் காணப்பட்டு அப்பெரும் பிராணிகள் ஒரு காலத்தில் இந்தப்பூமியின்மீது உயிர்வாழ்ந்த உண்மை வெளியாயிருக்கிறது. மேற்கூறிய மாமத் என்ற பிராணி ஒன்று, சடிதியாக உறை பனி மூடி யிறந்து புதைபட்டிருந்தது. மூடிய பனிப்படைகள் வெட்டி வெளிப்படுத்தப்பட்டபோது, சதை தோல் உரோமம் ஒன்றும் அழியாமல், (பல்லாயிர வருடங்களுக்குமுன் இறந்திருந்தும்) இப்போது தான், செத்தது போலத்தோன்றி, அதன் மாமிசத்தை அறுத்துப்போட, நாய்கள் தின்னும்படி பதனழியாமலிருந்திருக்கிறது. இவ்வாறே, இப்போதில்லாத பல பிராணி வருக்கங்கள் முன்காலத்தில் இருந்தனவென்பது அவைகளின் எலும்புகள் காணப்பட்டிருப்பதினால் விளங்குகின்றது. ஆயினும் இக்காலத்து மனிதரிலும் மிகப்பெரிய உருவமுள்ள மனிதராவது, ஒன்றுக்கதிகமாயுள்ள தலை இரண்டுக்கதிகமான கைகள் உள்ள மனிதராவது இருந்தார்களென்று கூறும்படியான மனித எலும்புகளொன்றும் அகப்படவில்லை. இரண்டுதலை நாலுகை முதலிய விசித்திர உறுப்புகளுள்ள உற்பாதப் பிறவிகள் இப்போது காணப்படுகின்றனவே யென்றால், அவைகள் மிகவும் ஏகதேசமாக உற்பத்தியாய் அற்ப ஆயுளுடையவைகளாய் இறந்தொழிந்து விடுகின்றன. இதனாலே தான் இப்படிப்பட்ட கோர ரூப மனித எலும்புகள் அகப்படவில்லை.

பாராதிருந்தும் அவனது நற்குண நல்லொழுக்கங்களைக் கேட்டே அவன்பாற் பேரன்பு பூண்டிருந்தமையால்" விளங்கும்.

II. குற்றங்கள்.

இத்தகைய நற்குணங்களை யுடையாரென ஒப்புக்கொள்ளப் பட்டார் குற்றஞ் செய்தற் பாலரோ? அவர்கள் செய்தனவாகச் சொல்லப்பட்ட குற்றங்கள் குற்றங்களோ? என்று விசாரிப்பாம்.

i. இராவணனது குற்றங்கள்.

(1.) ராவணன் தேவரைச் சிறையிட்டானும். அதனால் என்னை? தேவர் யார்? அவர்கள் ஆரியருள் ஒரு வகுப்பினர். ஆரியர் தஞ்சாதியா ரல்லாத சாதியார்களை 'அசுரர்', 'அரக்கர்', 'குரங்குகள்', என்று இழித்துக் கூறியது போலவே தஞ்சாதியாரை 'தேவர்', 'சுரர்', என்று உயர்த்திக் கூறினர். [பிராமணருக்குப் பூசுரரென்ற பெயரும் இவ்வாறு வந்ததே. பூசுரர் என்பதன் பொருள் பூமித்தேவர், அதாவது-பூமியில் வசிக்கும் தேவர் என்பதே. இந்தப்பெயரைத் தாங்களே தங்களுக்குச் சூட்டிக்கொண்டதோடு, இதர சாதியார்க்கு ஒப்பாகத் தாங்கள் புசிக்கும் போஜனத்தைத் தாங்களேதேவபூசை யென்றும் சொல்லிக்கொள்கின்றனர். என்ன அநீதம்!!]. ஆகவே, தேவரென்ற ஆரியர்கள் இராவணனது சாதியாருக்கு விரோதிகளாகிய சாதியார். விரோதிகளை யுத்தத்தில் செயித்துச் சிறைப்படுத்தியது புகழ்தற்குரியதே யன்றிக் குற்ற மாகுமா?

(2.) இராவணன் முனிவருக்கு இடையூறியற்றினது— முனிவர் யாவர்? அவர்கள் ஆரியருள் வைதிக ராஞேரே. அவர்கள் படையெடுத்துத் தென்திசை நோக்கிவந்த லௌகிக பிரவர்த்தகரான மற்றைய ஆரியரோடு வந்து இவர்கள் செயித்தும்செயிக்காமலும் இருக்கும் திராவிட தேசத்தின் ஆரணியங்களில் திராவிடரது அநுமதியின்றி நுழைந்து அங்கிருந்து கொண்டு தங்கள்

வைதிக கிரியைகளை நடத்துவதோடு திராவிடரது பலாபலன் களைத் தெரிந்து எதிரிகளின் உளவு புகல்வோராயிருந்தனர். இம் முனிவர்களை இராவணுதியர் தங்கள் தேசத்தினின்றும் அப்புறப் படுத்த முயன்றதே இடையூறு செய்ததாகக் கூறப்பட்டது. இவ்வாறு அவர்களை அப்புறப்படுத்த முயன்றவிடத்தும் திராவிடரது உயர்ந்த குணம் விளங்குகிறது. எவ்வாறென்னில், இவர்கள் அம்முனிவரது வேள்விக்கு விக்கினம் இழைத்தார்களே யன்றி எளிதாகக் கொல்லக்கூடிய அம்முனிவர்கள் எவரையுங் கொன்ற தாகக் கூறப்படவில்லை. கொன்றிருந்தால், எதிர்ப்பக்கத்துக் கவி யாகிய வான்மீகி கூருது விடுவாரா? பகைவராலுைம் வைதிகர் களைக் கொல்வது நெறியன்று என்னும் உயர்ந்த கருத்தினராய்த் தமது பலாபலம் தெரிந்து எதிரிகளுக்கு உளவு புகலாநின்ற உருத் திராட்சப் பூனைகளை இராவணுதியர் கொல்லாமல் துரத்த முயன் றது குற்ற மாகுமா?

(3.) *சீதையைக் கவர்ந்து சிறைவைத்தது.*— ஒரு சாதி யாருக்கும் மற்ருெரு சாதியாருக்கும் யுத்தம் நடந்துகொண்டி ருக்குங் காலத்தில் அல்லது விரோதமிருக்குங் காலத்தில் ஒரு பக்கத்தார் மற்ருெரு பக்கத்தாரது மாடுகளைப் பொருள்களைக் கவர்தல், ஆடவர் பெண்டிரை அகப்படுத்திச் சிறைப்படுத் தல் முதலிய செயல்கள் அக்கிரம மானவைக ளென்று யாவரும் எக்காலத்தும் கூறக் கேட்டிலேம். ஆரியரோ திராவிரடது தேசத்தை ஆக்கிரமித்துக் கைப்பற்ற முயன்று கொண்டிருந்த னர். அப்படிப் பட்ட காலத்தில் இராவணன் சீதையைக் கவர்ந்து சிறைப் படுத்தியது குற்றமாகுமா? யுத்த முறையில் சீதையை இராவணன் கவர்ந்தது, ஐக்கியமாய் ஓர் அரசனுக்கு உள்ளடங்கி வாழுங் குடிகளுள் ஒருவன் மனைவியை மற்ருெருவன் கவர்ந்தது போலப் பெருங் கொடும் பாதக மாகப் பிரமாதப்படுத்தி யிருக் கிறது. இது நிற்க, சீதையைக் கவர்ந்து சிறைவைத்த இராவணன் அவளை எவ்வாறு நடத்தினு னென்பதைவிசாரிப்போம். அவளது இராஜ கௌரவ ஸ்திதிக்குக் தகுதியாகத் தன் தம்பி விபீஷண

மகளை அவளுக்குநீங்காத பாங்கியாக்கி[வான்மீகி கோரரூபமுள்ள அரக்கிக ளென்றாலும் மனுஷிகளே யாகிய] வேறு ஸ்திரிகளை ஏவற்பெண்களாக நியமித்து அவளைத் தனது சிறந்த சிங்காரத் தோட்டமாகிய அசோகவனத்தில் வாழவைத்தான். வைத்தவன், பலாத்காரம் சிறிதும் செய்யானாய், இனிய நன்னய வார்த்தைகளால் அவள் இசைவுபெறுமாறு முயன்றான். அவள் இசைந்தால் முறைப்படி மணஞ்செய்து அவளைத்தன் பட்டமகிஷியாக்குங் கருத்தினனா யிருந்தான். அன்றேல்,

> "தேவர் தேவியர் சேவடி கைதொழுந்
> தாவில் மூவுல கின்தனி நாயகம்
> மேவு கின்றது நுன்கண் விலக்கினை:
> யாவர் ஏழையர் நின்னின் இலங்கிழாய்?"

என்றது பொருந்தாது. பலவாறு போதனை செய்ய அவள் இணங்காம லிருந்தும் அநாகரிகர் போல அவளைப் பலவந்தஞ் செய்தா னல்லன். இம்மட்டோ? இராம லக்குமணர் தன்தேசத் துட்புகுந்து, தன் நகரத்தைப் பெருஞ் சேனையோடு வளைந்து, தன் இனத்தவர்களைத் திரள் திரளாகக் கொன்று, தன் அருமைத் தம்பி கும்பகர்ணனையும் செல்வப் புதல்வன் இந்திரசித்தையும் வதைத்த காலத்தும், கோபமூண்டு சீதையைக் கொன்றா னல்லன். எவ்வகைத் துன்பமும் அவளுக்கு இயற்றினனு மல்லன். கொல்லுங் கருத்து அவனுக்குத் தோன்றா திருந்ததோ வென்னில், தோன்றா திருக்கவில்லை. தோன்றித்தான் இராமன் முதலியோரைப் பயமுறுத்தற்கு மாயா சீதையைக் கொன்றனன். உண்மைச் சீதையின் ஓர் உரோமத்திற்கும் தீங் கிழைத்திலன்.

இனி மற்றொரு விஷயங் கவனிக்கற் பாலது. திராவிட இராவணன் தன் கைவசப் பட்ட ஆரிய சீதையை நடத்திய விதம் இதுவாக, ஆரிய இலக்குமணன் கைச்சிக்கிய திராவிட சூர்ப்பணகையின் கதி எவ்வாறாயிற் றென்று பார்ப்போம். அவன், அவள் மூக்கு முதலிய உறுப்புகளை அரிந்து, அங்கபங்கமும் மான

பங்கமும் செய்தான். அவ்வாறு செய்த அநியாயத்தை நியாய மாக்குவதற்கு வான்மீகி கூறும் ஒரே முகாந்தரம் அவள் சீதை யைத் தூக்கிக்கொண்டு போக யத்தனித்தா ளென்பதே. இதை யாவர் ஒப்புவர்? இது உண்மையென்று வைத்துக் கொண்டாலும், தன் காவலில் உள்ள சீதையை ஒரு பெண்பிள்ளை கொண்டு போகா தபடி கிரமமான வேறு வழிகளால் தடுக்கமாட்டாமல் இந்திரசித் துவை வென்ற வீரன் இவ்வாறு செய்தா னென்பது நகைப்புக் கிடமன்றோ? இராமனாயினும் இது தக்கதன் றெனத் தம்பியைத் தடுத்தானா? தடுக்குமுன் அப் பங்கங்கள் நிகழ்ந்துவிட்டன வென் னின், அதற்காகப் பச்சாதாபப்பட்டானா? தன்கைப்பட்ட தாட கையைக் கொலையே புரிந்தோன், தம்பி மற்றொரு மாதைப் பங் கப்படுத்தல் மட்டும் செய்தற்கு, வருந்துவ தெங்ஙனம்? ஆயின், இப்பெண்கள் அரக்கிக ளல்லரோ? இவரைக் கொல்வதும் பங்கப் படுத்துவதும் குற்றமாகுமோ? என்னில், முன்னமே நான் அசுரர், அரக்கர், குரங்குகள் என்பவை பிற சாதியாருக்கு ஆரியரிட்ட பெயர்க ளென்றதை ஞாபகப்படுத்துக. தாடகை, கும்பகர்ணன் முதலியோரைப் பிரமாண்ட காத்திர முள்ளா ரென்றது மனித ரை இராக்கத ரென்றதனோடு பொருந்தக் கூறியதே யன்றி வே றன்று. இவ்வாறு வான்மீகி கூறுவதனால், வெளி மாசகற்றி உள் ளுறை உண்மைப் பொருளைத் தெரியவல்லார் மயங்கார்; மயங்கிப் பெண் மானபங்கமும் பெண்கொலையும் பழிப்பானவைக ளல்ல வென்று ஒப்புக்கொள்ளார்.

தன் பாட்டி தாடகையைக் கொன்று தன் தங்கை சூர்ப்ப ணகையை மானபங்கமும் அங்கபங்கமும் செய்த பகைவர் திறத் தில் பழிக்குப்பழி செய்ய வேண்டுமென்னுங் கருத்தினனாய் இரா வணன் சீதையைக்கவர்ந் திருக்கலாமே. அப்படிக் கவர்ந்தானென் றால் அவன் செய்கை குற்றமென்னும் பேருக்கும் உரியதாமோ? இவ்வாறாக சீதை விஷயத்தில் இராவணன் நடந்து கொண்ட நடக் கையினாலும், தாடகை சூர்ப்பணகை திறத்தில் இராம லக்கும ணர் செய்த செய்கைகளாலும், பெண்பாலாரைத் திராவிடரும்

ஆரியரும் நடத்தின முறைகளும் அவரது நாகரிக நிலைமைகளும் விளங்கும். திராவிடர் ஆரியரை மிலேச்சரெனக் கருதியதும் ஆச்சரிய மின்றாய் விடும்.

இராவணனது நகரம், தெருக்கள், மாளிகைகள், சோலைகள் முதலியவைகளைப் பற்றிய வருணனைகளால் அக்காலத்துத் திராவிடர் சகலவகை நாகரிகங்களிலும் சிறந்திருந்தா ரென்பது வெளிப்படுகின்றது. இராவணன், அநுமான் முதலியவர்கள் கல்வித் திறத்தைப்பற்றிய புகழ்ச்சியால் திராவிடர் கல்வி கேள்விகளின் மேம்பாடு குறிப்பிக்கப் பட்டிருக்கின்றது. அநுமானையும் அங்கதனையும் இராவணன் நடத்திய விதத்தினால் தூதரைத் திராவிடர் நடத்திய முறை விளங்குகின்றது. சீதைக்குச் சிறையினிடத்து நடந்த மரியாதைகளால் திராவிடர் ஸ்திரிகளிடத்துக் கௌரவ புத்தியுடைய நாகரீகர் என்பதும் புலப்படுகின்றது.

ii. வாலியின் குற்றங்கள்.

தன் தம்பி சுக்கிரீவனை நாட்டை விட்டுத் துரத்தியதும், அவன் மனைவியைக் கவர்ந்ததும் வாலியின் குற்றங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளையும் விசாரிப்போம். வாலி தன்னிராச்சியத்திற்குச் சேட்ட புத்திர பரம்பரைப் பாத்தியத்தினால் அரசனானான். அவன் சில காரணத்தினால் அயல் நாடு சென்றபோது, சுக்கிரீவனிடம் இராசாங்கத்தை ஒப்பித்துப் போனான். சுக்கிரீவன் இராச்சிய இச்சையால் தமயன் திரும்பி வந்த போது அரசாட்சியைத் திரும்ப ஒப்பிக்க மறுத்தான். அதன்மேல் வாலி அவனைச் செயித்து இராச்சியத்தை மீட்டுக் கைவசப்படுத்தி, அவனையும் அவனுக்குத் துணையாய் நின்ற இராச துரோகிகளாகிய அநுமான் முதலியோரையும் தேசத்தினின்று அகற்றி விட்டான். சுக்கிரீவன் மனைவி முதலிய அவ்விராச துரோகிகளைச் சார்ந்த பெண்பாலரை இருந்த இடத்தே இருக்க விட்டான். இது உண்மையா யிருக்கலாம். இதைச் சற்று மாற்றி, இராமநேசனான சுக்கிரீவனுக்கு அநுகூலமாக, வான்மீகி கூறி யிருக்கிறா ரென்று

ஊகிக்கத் தக்க காரணம் உண்டு. சுக்கிரீவன் இராச்சிய இச்சையே காரணமாகத் தமயனைக் கொல்ல வில்லையானால், வாலி இறந்த போது கிரமமாக ராச்சியத்தை அடைய வேண்டிய வாலி புத்திரனை அங்கதனுக்கு முடி சூட்டி யிருப்பான். அவ்வாறு செய்யாது தானே பட்டங் கட்டிக் கொண்டதே அவன் சகோதர காதகத்துடன் இராச துரோகமும் உள்ளவ னென்பதை நாட்டுகின்றது. சுக்கிரீவன், தனக்குத் தமயனும் அரசனு மாகி இருவகையாலும் தகப்பனைப் பாவிக்கற் பாலனை வாலியை இராமனால் கொல்லுவித்த மாபாதகத்தையும் இராமன் தன்பால் பேரன்பு பூண்டு விசேட விசுவாசம் வைத்திருந்த வாலியைக் கொன்ற விசுவாச காதகத்தையும் ஒருவாறு நியாயமாகத் தோன்றும்படி செய்தற்காக், சுக்கிரீவன் மனைவியை வாலி கவர்ந்ததாக வான்மீகி கூறியிருப்பினும் இருக்கலாம்.

III. ஆரியர் திராவிடரைச் செயித்த வழிகள்.

இராமன் தன்பால் விசுவாச முள்ளவனும் நியாயத்துறையிலிருந்தவனும் அதி பலசாலியு மான வாலியைச் சிநேகம் செய்யாது, சுக்கிரீவனை நட்புக் கொள்வானேன் என்பதை விசாரிப்பாம். வாலியோ எவ ருதவியும் வேண்டாத நிலைமையனா யிருந்தான். அவனோடு சிநேகம் பண்ணினால் அவனும் சிநேக வாஞ்சை பாராட்டுவா னாயினும், தன்னைப் போலவே திராவிட ராசனாகவும் தனக்குப் பழைய நட்பாள னாகவும் உள்ள இராவணனை, பகைச் சாதி யரசனும் புதிய நண்பனு மான இராமன் வெல்லுதற்கு உதவி செய்வானா? செய்யான். சுக்கிரீவனோ நாட்டினின்றும் துரத்துண்டு சகல செல்வமும் சம்பத்தும் இழந்து வருந்திக் கொண்டிருந்தான். இவனுக்குச் சகாயம் செய்து இராச்சியத்தைப் பெறும்படி செய்தால், இவன் இயல்பாக மிக்க நன்றி யறிவுடையவனா யிருப்பான்; தமயனையே எதிர்த்தோ னாதலால், சுசாதி யரசனான இராவணனை எதிர்த்தற்குந் தடையில்லாமல், தன் சேனையோடு தானும் அவ்விராவணனை வெல்லுதற்குத் துணையாவா னென்று ஆலோசனை செய்து, இராமன் சுக்கிரீவனை நட்புக்

கொண்டு அவனுக்கும் அவனோடு திரத்துண்டிருந்த அநுமான முதலிய வீரருக்கும் தனக்குத் தெரிந்திருந்த அரிய யுத்த தந்திரங்களைக் கற்பித்து வெல்லும் உபாயமும் சொல்லிக் கொடுத்து, அவர்களைக்கொண்டு வாலியையும் அவன் சேனையையும் எதிர்க்கச் செய்து, தான் முன்னில்லாமல் மறைவா யிருந்து சண்டை நிகழ்ந்து கொண்டிருக்கையில், தக்க சமயத்தில், தன்வில்லில் அம்பைத்தொடுத்து எய்து வாலியைக்கொன்றான். வெளிப்படையாகச் சுக்கிரீவனுக் குதவி செய்து அவன் தோற்றுவிட்டால், தன்பால் முன் விசுவாச முள்ளவனாக இருந்த வாலி பகைவனாய் விடுவான்; ஒருகால் அவ்வாலியை வேண்டி அவன் உதவி பெற்று இராவணனை வெல்லுவதற்கும் இடமின்றாய் விடும் என்று இராமன் கருதிக் கரவாகச் சுக்கிரீவனுக்கு சகாயம் செய்தா னென்று ஊகிக்க வேண்டி யிருக்கிறது.

வாலியையும் அவனுடைய இராச்சியத்தையும் அவன் தம்பி சுக்கிரீவ னுதவியைக்கொண்டு செயித்தது போலவே, இராவணனையும் அவன் தேசத்தையும் அவன் தம்பி விபீஷணனது சகாயத்தால் இராமன் செயித்தான். இந்த விபீஷணனை வான்மீகி மிகவுயர்ந்த குணங்களுடையவ னென்று புகழ்ந்து கவுரவப்படுத்தியிருக்கிறார். அது காரணமாகப் பின்னோர் விபீஷணாழ்வார் என்று, வைணவ ஆசாரியாருட் சிறந்தோர்க்கே உரித்தாகிய "ஆழ்வார்" என்ற பட்டம் சேர்த்தே, அவன் பெயரைக் கூறும் போதெல்லாம் கூறுவாராயினர். இவ்வளவு பெருமையை இந்தத்திராவிடனுக்கு ஆரியர் கொடுத்ததற்குக் காரணம் அவன் தன் சாதி நன்மை, தன்தேசநன்மை, தன் தமயன் முதலிய பந்துக்களின் நன்மை இவைகள் எல்லாவற்றுக்கும் விரோதமாக ஆரியருக்கு உதவி செய்ததே. சுக்கிரீவனைப் போலவே விபீஷணனும் சகோதர துரோகத்தோடு இராச துரோகமும் செய்து இராமனுக்கு உதவி செய்தவன். அவனுக்கும் இவனுக்கும் உள்ள முக்கியபேதம் இவன் வஞ்சகமே. அவன் அஞ்சாத தீரன்; இவன் பயந்த கோழை. அவன் உயிரை வெறுத்து அதிபலசாலியான வாலியையும் எதிர்த்

துப் போர் செய்தும் இலங்கையில் நிகழ்ந்த யுத்தத்தில் பல சமயங் களில் சாவுக்கஞ்சாது சாகசங்கள் செய்தும் உள்ளவன்; இவன் எப்போதாயினும் போர் செய்தா னென்று கேட்டிலேம். இவன் உயிரைக் கவர இந்திரசித்து விட்டவேலை இலக்குமணன் ஏற்கத் தப்பிப் பிழைத்தவன். அவன், சேட்ட புத்திர பாத்தியத்தால், தன் தமையன் வாலி யடைந்திருந்த பூர்வ ராச்சியத்தைப் பகிரங்க மாக வலியினாலடையக் கருதினான்; இவன் தன்தமையன் புயபலத் தினால் வென்று சுவார்ச்சிதமாக அரசாண்டுவந்த இராச்சியத்தை அந்தரங்கமாகக் வஞ்சனையினால் கவர இச்சித்தான். அவன்நியா யமாகவோ, அநியாயமாகவோ, தமயனால் நாட்டினின்று துரத் துண்டு காட்டில் காலந் தள்ளும்படி துன்புறுத்தப்பட்டிருந்தான்; இவன், தமையனால் சகலவித வைபவங்களோடு நாட்டிலேஇனிது வாழும்படி, இராச பதவியில் வைக்கப்பட்டிருந்தான். இவ்வாறு சி றந்த பதவியிற் றன்னை வைத்திருந்த இராவணனுக்கு விரோதமாக விபீஷணன் ராமனைச்சேர்ந்த காரணம் யாதென்று தெரிவோம்.

ராவணன் சீதையைக் கவரும் வரையும் நெறி பிறழா திருந் தான், கவர்ந்து துன்மார்க்கன் ஆனா னென்று கருதி விபீஷணன் தமயனைத் திரும்பச் சன்மார்க்கன் ஆகும்படி போதித்தானென் றும், அப்போதனையை அவன் கவனியாததால் இராமனைச் சரண் அடைந்தா னென்றும் வான்மீகி கூறி யிருக்கின்றார். ஆரிய பார பட்சமாக நோக்குதலை யொழித்துச் சமதிர்ஷ்டியாக நோக்கினால், இராவணன் சீதையைக் கவர்ந்தது குற்ற மன்றெனமுன்னமே கூறப்பட்டது. அது குற்றமென வைத்துக்கொண்டாலும், அது விபீஷணன் இராவணனை நீங்குதற்குக் காரணமாமே யன்றித் தன் சாதி விரோதியாகிய இராமனைச் சார்தற்கு நியாய மாகாது. தன் தமயன் துன்மார்க்கப்பிரவேச னானனென்று அவனை நீங்கியவன் நாடோ காடோ எதுவாயினுந் தனக்கு உவந்த இடஞ்சென்று கிரு கஸ்தனாக வாயினும் சந்நியாசியாக வாயினும் வாழ்ந்திருக்கலாம். ஆயின், தமயன் சாதாரணமான மனிதனாக இல்லாமல் அரசனாக விருந்ததனாலும், துன்மார்க்கனான அரசன் உள்ள அளவும் நாட்

டுக்குச் சேம மில்லை யாதலாலும் நாட்டின் நன்மையி னிமித்தம் அவனைக் களைய வேண்டியது கடமை யென்றும் அக்கடமையை நிறைவேற்றுவதற்காக இராமனுக்குச் சகாய ஞானென்றும் ஆலோசித்தாலோ; அதுவும் பொருந்த வில்லை, ஏனெனில் இராவணன் தன் சாதிக்குச் சத்துருக்களாகிய தேவரென்ற ஆரிய சாதியாருக்கு இடுக்கண் செய்தா னென்று கூறப்பட்டிருக்கிறதே யன்றி, அவனுடைய பந்துமித்திரருக்கும் அவன் குடைக்கீழ்த் தங்கி வாழ்ந்தோருக்கும் எவ்வகை யிடையூறும் இயற்றினன் என்று எங்கும் கூறப்பட வில்லை. விபீஷணன் போலவே, கும்பகர்ணனும் இந்திரசித்தும் சீதையைச் சிறையினின்றும் விடுதி செய்யவேண்டு மென்று இராவணன்பால் பரிந்து பேசினர். அவனவர்கள் வேண்டுகோளுக் கிணங்கவில்லை. அதனால் அவர்கள் விபீஷணனைப்போல் அவனைக் கைவிடுத்தனரோ? அவன்பக்கமே நின்று யுத்தம்செய்து அவனுக்காக உயிருந் துறந்தனர். கும்பகர்ணன் சர்வ ராச்சியங்களைப் பெறுவதற்காகவும் இராவணனுக்குத் துரோகஞ் செய்யா னென்பதை மனத்துள் வைத்து, வாயினல், விபீஷணன், "அண்ணா இராமன் எனக்கு வாக்களித்திருக்கிற லங்கா ராச்சியத்தை நீ ஏற்றுக்கொண்டு ராமனைச் சேர்வா யாக" என்று யுத்த மத்தியில் கூறினதற் கிசைந்து, ஒருங்கே சாவினின்று நீங்குதலையும் சாம்பிராச்சிய மடைதலையும் பொருட்டாக மதியாமல், சகோதர வாஞ்சையும் இராசவிசுவாசமும் சுதேச சுசாதி யபிமானங்களுமே சிறப்பாக எண்ணி நடந்த பெரியோனாகிய கும்பகர்ணனுக்குக் கொடுக்கற் பாலதாகிய ஆழ்வார்ப் பட்டத்தை விபீஷணனுக்குத் தந்த திராவிடருடைய மதியை யென்னென்று கூறுவது? விபீஷணன், தமயனை நீங்கிய மாத்திரையில் நில்லாது எதிரியைச் சேர்ந்து, இராவணேசுவரன் தம்பி என்னும் அதி கவுரவ ராஜகெம்பீர மஹோந்நத நிலைமைக்குச் சற்றும் ஒவ்வாது அடைக்கலம் புகுந்து, காலில் விழும் இழிதொழிலும் செய்து, தன் சொந்தச் சகோதரரையும் சகோதராது புத்திரரையும் கொல்லும் மருமங்களை எதிரிகளுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொல்வித்தான். விபீஷணன் இவ்வள

வும் செய்ததற்குக் காரணம், இராச்சிய இச்சையாக இல்லாமல், இராவணது துன்மார்க்கமாகவிருந்தால், அவன் இராமன் அம்பால் இறந்த போது, அவன் கிரீடத்தைத் தன் தலைமேல் தூக்கி வைத்துக் கொள்வானேன்?

இனி, சமஸ்கிருத ஆதிகாவிய மாகிய இராமாயணத்தால், திராவிட ஜாதியாருள் ஒருசில வகுப்பாரது வரலாற்றையும் அவருட் பேரரசராய் இருந்தோரது செல்வமாட்சி, திண்போர் வலி, ராஜரீக முறைமை, நாகரீக வாழ்கை முதலிய சிறப்புகளையும் ஒருவாறு ஆராய்ந்து அறிந்தோம். அக்காலத்துத்தான், ஆரியர் தென்னிந்தியாவிற் குடியேறிக்கொண்டிருந்தனர்; பெரிய நகரங்களில் அவர்கள் இன்னும் பிரவேசிக்கவில்லை; காடாரம்பங்களில் குப்பங்குப்பமாய்க் குடிசைகள் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தனர்; என்றிவை முதலிய விபரங்களும் அவ் இதிகாசத்தால் விளங்குகின்றன. ஜாதிவேற்றுமை, யாதும், யாண்டும், அப்பொழுது இருந்ததாக இல்லை. புதிய வரவினராகிய அவ்வாரியர்க்கு அநுகூலராயும் பிரதிகூலராயுமிருந்த திராவிடப் பெருஞ்சாதி வகுப்பினரை ஆரிய கவி அரக்கர் என்றும் குரக்கினம் என்றும் இழித்துக்கூறியது அவர்க்குரிய ஜாதித்துவேஷம், செய்ந்நன்றி கொல்லல் ஆகிய குணதோஷத்தைக் குறிக்குமே அன்றி, மற்றொன்றையுங் குறிப்ப தன்று. பிராமணோத்தமராகிய பரத்துவாச முனிவராலும் அவரது கற்புடைய மனைவியராலும் அன்புடன் வரவேற்று விருந்து உபசரிக்கப் பெற்ற அத்திராவிட நல்லாரை, வான்மீகி செய்ந்நன்றி யறியுங் குணமுடையோராயின், வேறு விதம் கூறியிருப்பர். இது நிற்க.

இராமாயண காலத்து, விந்திய மலைக்குத் தென்பாலும் தற்கால நைசாம் ராச்சியத்திற்கு வடபாலுமாகக், கிழ மேலாக, நீண்டு கிடந்த நிலம், கிழக்குப்பகுதி "தண்டகாரணியம்" எனவும், மேற்குப் பகுதி "ஜனஸ்தானம்" எனவும், காடுபாதி நாடுபாதி

யாய், இராவணனது ஆளுகைக்குட்பட்டிருந்தது. அந்த லங்கே சுரனது தங்கை சூர்ப்பணகை, ராஜ பிரதி நிதியாய், அப்பூமியை ஆண்டு வந்தாள். இதற்கு தெற்கே மைசூர்ப் பிரதேசம் வரை உள்ள நாடுகள் நீலன், சுக்கிரீவன், வாலி முதலிய சிறந்த திரா விட அரசர்களால் ஆளப் பெற்றன. மைசூர் மலைப்பிராந்தியங் களுக்குத் தென்பாலிருந்த *தமிழகம் அக்கால முதலே மிக்க செழுமையும் சீர்மையும் பெற்றிருந்த தென்ற குறிகள் இராமா யணத்திற் காணப்படுகின்றன. "காவேரி நதியைத் தாண்டிப் பொருநை நதியைக் கடந்து, அப்பாற் சென்றால், பாண்டியனு டைய பொற்கதவமிட்ட மதிலரணைக் காண்பீர்கள்" என்று சுக் கிரீவன் அநுமான் முதலிய படை வீரர்க்குச் சொன்னதாக வான்மீகி கூறுகின்றார். பாண்டியனது கோட்டை பொற் †கபா டம் பொருந்தியதாய் இருந்ததால் பின்னுள்ளோரும் அதனைக் "கபாடபுரம்" என்ற காரணக்குறியால் அழைத்தனர். "இடைச் சங்கமிரீஇய" இந்நகரத்தின் தோற்றமானது இராமாயண காலத் திற்கு முற்பட்ட தென்பது இதனாற் பெறப்படும். இக்கபாட புரத்தின் கண்ணும், அதன் முன்னர், கடலாற் கொள்ளப்பட்ட தும் முதற் சங்கம் நடந்தேறியது மாகிய தென் மதுரையின் கண்ணும் நிலைபெற்றுச் செங்கோ லோச்சிய பாண்டிய அரசாட் சியின் ஆரம்பம் இராமாயண காலத்துக்கும் இன்னும் வெகு முற் பட்ட காலம் என்பது சொல்லாமலே அமையும். அவ்‡விராமா யண பூர்வகாலத்துத் தென்னிந்தியாவின் ஜாதி நிலைமை எத் தன்மையதென்று இனி ஆராய்வாம்.

---

*தமிழகம் = தமிழ்நாடு.
†கபாடம் = கதவு.
‡இராமாயண பூர்வகாலம்=இராமாயண காலத்துக்குமுந்தியகாலம்

2-வது அதிகாரம்.

இராமாயண பூர்வ காலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை.

இந்தியா வொழிந்த எந்தத் தேசத்திலும் சாதி பேதமென்பது கிடையாது. அந்தத் தேசங்களில் சாதியென்பது அந்தந்த ஜனங்கள் வசிக்கும் தேசம்பற்றி வழங்குவது, சீனதேசத்தார் சீனரென்றும், ஜப்பான்தேசத்தார் ஜப்பானியரென்றும், ருஷிய தேசத்தார் ருஷியர்களென்றும், ஜெர்மனி தேசத்தார் ஜெர்மானியரென்றும், இங்கிலாந்து தேசத்தார் ஆங்கிலேயர் என்றும், சாதிப்பேர் பெற்றிருக்கிறார்கள். இவ்வாறே எஞ்சிய பல சாதியாரும் அவரவர் தேசம் பற்றியே சாதிப்பேர் தரித்திருக்கிறார்கள். இங்கிலீஷ்காரரிலே சிலர் அமெரிக்காவில் குடியேறி அமெரிக்கரென்றும், வேறுசிலர் ஆஸ்திரேலியாவில் குடியேறி ஆஸ்திரேலியரென்றும் குடி புகுந்த தேசத்தினால் பழைய சாதிப்பேர் மாறிப் புதுச்சாதிப்பேர் பூண்டிருக்கின்றனர். இந்தியாவிலும் ஆரியர் வரு முன் அந்தந்த சனங்கள் அவரவர்கள் வசித்த இடம் பற்றியே சாதிப்பேர் கொண்டிருந்தார்கள். தென்னிந்தியாவாகிய திராவிட தேசத்தில் அவரவர்கள் இருந்த நிலம் பற்றியும் தொழில் பற்றியும் சாதிப்பெயர்கள் வழங்கி வந்தன. அப்பெயர்கள் இன்னும் நிலைபெற்றிருக்கின்றன. நம்முன்னோர் குறிஞ்சி நிலத்தில் வாழ்வோனைக் குறவனென்றும், பாலை நிலத்தில் வசிப்போனை மறவ னென்றும், முல்லை நிலத்தி லிருப்போனை இடையனென்றும், மருத நிலத்தி லுள்ளோனை *மள்ளன் என்றும், நெய்தநிலத்தில் அமர்ந்தோனைப் பரவ னென்றும் வழங்கினர். இச்சாதிப் பெயர்களும் இச்சாதிகளும் இன்னும் இருக்கின்றமை யாவரும்

---

*மள்ளன், பள்ளன், உழவன், ஒரு பொருட்பெயர்கள்.

அறிவர். ஆயின், இச்சாதிகளுள் இப்போதுள்ள பேதம் ஆதியில் இல்லை. எவ்வாறெனில் நம்முன்னோர் நிலங்களைக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என ஐந்து வகையாக வகுத்து, அவ்வந்நிலத்திலுள்ள மனிதர், மிருகங்கள், பறவைகள், தாவரங்களை அவ்வந்நிலத்துத் *திணைப்பொருள்களாகப் பகுத்து, ஒரு நிலத்துப்பொருள் மற்றொரு நிலத்துக் காணப்படுவதைத் திணை மயக்கத்தின் பாற்படுத்திப், பாகுபாடு செய்திருக்கின்றனர். அவர்கள் மற்றைப் பொருள்களை அவைகளுள்ள நிலம்பற்றி வகுத்தது போலவே மனிதர்களையும் அவர்கள் வாழும் நிலம்பற்றி வகுத்தனரே யன்றி ஆரியரைப்போல் ஒரு சாதி மேற்சாதி ஒருசாதி கீழ்ச்சாதி யென்று பேதம் ஏற்படுத்தின ரல்லர்.

இக்காலத்தில் ஆங்கிலேயர் அமெரிக்காவில் குடியேறி அமெரிக்க ரானதுபோல, முற்காலத்தில், குறிஞ்சி நிலத்தில் குறவனென்றிருந்தோன் முல்லை நிலத்தில் குடியாக அமர்ந்தால் இடையனாய் விடுவான். இவ்வாறே வேறெந்த நிலத்தானுவது மற்றொரு நிலத்தில் குடிபுகுந்தா னாைல் குடிபுகுந்த நிலத்துச் சாதியாய் விடுவான். ஒரு சாதிக்குடி மற்றொரு சாதிக்குடி யாதல் போல, ஒரு சாதி மற்றொரு சாதியோடு உடனுண்டு களித்தலும் பெண் கொண்டு கலத்தலும் வழங்கிவந்தன. சீவக சிந்தாமணியாகிய பூர்வ காவியத்தை வாசித்தோர்க்குச் சீவகராசன் பலசாதி மாதரை மணஞ்செய்து அப்பலசாதி மாந்தரோடு உண்டு உறவாடிக் களித்தமை ஞாபகத்துக்கு வரலாம்.

தென்னிந்தியாவுக்குத் திராவிட தேசமென்ற பெயர் பூர்வீக மானது. இதில் வழங்கும் பிரதானமான பாஷைகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவமென ஐந்து. இவ்வைந்தும் பஞ்ச திராவிடங்க ளென்று கூறப்படும். திராவிடம் என்ற பெயர் தமிழுக்குச் சிறப்புப் பற்றி உபசாரமாக வழங்குகின்றது.

---

*திணை = சாதி.

ஆயினும், அது மேற்கூறிய ஐந்து மொழிகளுக்கும் பொதுப் பெயர். இந்தியாவில் இவ்வைந்து மொழிகளும் வழங்கும் பாகமே திராவிட தேசமாம். இவ்வைந்து மொழிகளையும் முறையே தாய்மொழிகளாகவுடையவர் தமிழர், தெலுங்கர், மலையாளர், கன்னடர், துளுவர். இவர்களெல்லாரும் திராவிடசாதியாரெனப் படுவர். மேற்கூறிய குறவர் இடையர் முதலியோர் திராவிட சாதியாருள் தமிழரென்ற பிரிவாருள் அடங்குவர். இலங்கைத் தீவில் வடபாகத்தில் வாழ்வோர் பெரும்பாலும் தென்னிந்தியாவிலிருந்து குடியேறினவர்க ளாதலால் அவர்களும் திராவிட சாதியாருள் அமைவர்.

மேலே குறித்த இவர்க ளெல்லாரும் ஒரே சாதியாரோ? என்பதைப் பற்றி பின்பு விவகரிப்பாம். அந்த விவகாரந் தொடங்கும் போது சாதி யென்பதன் பொருளை வரையறுத்தல் வேண்டும். அதுவரையும் அவர்கள் ஒரு சாதியாரோ பலசாதியாரோ வென்று நிச்சயிக்க வேண்டிய ஆவசிக மில்லை. இப்போது கூறவேண்டிய தெல்லாம், திராவிட ரென்ற பொதுப் பெயரு ளடங்கிய அவர்க ளெல்லாரும் ஆரியரினின்றும் வேறான சாதியா ரென்பதும், அவர்கள் ஒரு சாதியாரா யிருந்தாலும் பல சாதியாராக விருந்தாலும் அவர்களுள் ஒரு வகுப்பாருக் கொரு வகுப்பார் உயர்ந்தவர் தாழ்ந்தவ ரென்பது அக்காலத்தில் இல்லை என்பதுமே. ஆயின், அத்திராவிடர்கள் ஆரியரினும் உயர்ந்தோரோ தாழ்ந்தோரோ வென்னின் உயர்ந்தோரு மல்லர், தாழ்ந்தோரு மல்லர். சீனர், ஜப்பானியர் முதலியோர் எவ்வாறு ஆரியரினும் உயர்ந்தோரு மாகாமல் தாழ்ந்தோரு மாகாம லிருக்கின்றனரோ அவ்வாறே திராவிடரு மிருந்தனர்.

ஆரியர் வந்த பின்பே நிலையான சாதிபேதமும் சாதிகளின் உயர்வு தாழ்வுகளும் உண்டாயின. இதுபற்றியே கபிலர் பார்ப்பானை நோக்கி "நாற்குலச்சாதியிந்நாட்டில் நீர்நாட்டினீர்" என்று கூறினர். பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற

நாற்சாதி ஏற்படுத்தினர் ஆரியரே. அவர்களுள்ளும் சாதிப்பிரிவுகள் ஆதியில் இல்லை. இப்போது சாதியைக் குறிப்பிக்கும் பெயர்கள் ஆரம்பத்தில் தொழிலைக் குறித்தவைகளா யிருந்தன. வரவர அவ்வவத்தொழிலினால் அடையும் இலாபங் காரணமாக, அவ்வத்தொழிலாளர்கள் வெவ்வேறு வகுப்பராய் வெவ்வேறு சாதியாரும் ஆயினர்கள். பிரம, க்ஷத்திரிய, வைசிய சாதிகள் மூன்றுமே ஆரிய சாதிகள்: சூத்திரசாதி யென்பது அவர்களினின்றும் புறம்பா யுள்ள எல்லாச் சாதியார்களுக்கும் அவ்வாரிய ரிட்ட ஒரு தனிப் பொதுப்பெயர்.

உலகத்தில் எல்லாச் சாதியார்களுமே தாங்க ளொழிந்த மற்றச் சாதியார்களை இழிவானவர்களாக எண்ணும் சுபாவமுடையார். இதற்கு வேறு சாட்சிவேண்டாம். தமிழர், தாம் இப்போது கவுரவிக்கும் பிராமணருள்ளிட்ட ஆரியரை மிலேச்சரென்று கொண்டிருந்ததே போதும். ஆரியர் என்ற பதத்திற்கு "மிலேச்சர்" என்று நிகண்டு முதலிய பூர்வ நூல்களில் பொருள் கூறி யிருப்பதைக் காணலாம். ஆரியரும் அவ்வாறே பிறசாதியாரை இழிவாகக் கருதும் இயல்பினர். அவர்களுள் தூரதேச யாத்திரைசெய்தோர் மற்றைச்சாதிகளை முதல் முதல் கண்டபோது, அச்சாதியார்கள் அவ்யாத்திரிகரது மனோபாவனைக்குத் தோற்றியவாறே ஒருசாதியரை அசுரரென்றும், வேறொரு சாதியரை இராக்கதரென்றும், இன்னொருசாதியாரை வானரர் என்றும், பலவாறுகப், பலசாதியார்களுக்கும் பெயரிட்டனர். பின்பு ஆரிய வழக்கில் அச்சாதியார்களுக்கு அப்பெயர்கள் வழக்கமான பெயர்களாய் விட்டன. இவ்வாறு *அசுரர் முதலிய பெயரைப்பெற்ற

*அசுரர் என்ற சொல் பிற்காலத்துத் தாழ்வுப் பொருளைத் தர நின்றதாயினும் வேதகாலத்து உயர்வுப்பொருளைக் குறிப்பதாயிருந்தது. ருக்வேதத்தில் அசுர என்ற பதம் "யஜமானர்" என்ற பொருளில் உபயோகப்பட்டுளது. ஆரியர் வடஇந்தியாவிற் குடியேறிய காலத்து அங்கே அரசாண்ட தமிழரச இனத்தாரை

சாதியார்கள் வாழ்ந்த தேசத்தில், ஆரியர்கள் செயித்தாவது, சமாதானப்படுத்தியாவது, பாதிசெயித்தும் பாதிசமாதானப்படுத்தியு மாவது குடியேறிய போது அச்சாதியாருள் தங்களைச் சேராதார்க்கெல்லாம் இழிவுப் பொருள்படும் சூத்திரப்பெயர் சுமத்தினர். இவர்களுள் அறியாதார், தாங்களும் தங்களையே சூத்திரர் என்று கூறிக்கொள்வராயினர். எக்காலத்தும், எத்தேசத்தும், அறியாதார் தொகை அறிந்தார் தொகையினும் மிக அதிகமாதலால் சூத்திரர் என்னும் பெயர் ஆரியரை யடுத்து வாழ்ந்த பிற சாதியாருக்குள்ளும் பெருவழக்கமாய் விட்டது. திருநெல்வேலி ஜில்லாவில் கிறிஸ்தவர் மிகுந்தும் இந்து சமயத்தினர் குறைந்தும் உள்ள கிராமத்தில் இந்துக்குடியானவ னொருவனை "நீ கிறிஸ்தவனோ" என்று கேட்டால், "சாமி! நான் அஞ்ஞானி" என்று, அவன் கிறிஸ்தவன் அல்லாவிடின், விடைகூறுதல் வழக்கமாயிருப்பது பலரறிந்தது. இதற்கு காரணம் இப்படிப்பட்ட கிராமத்திலுள்ள இந்துக்கள், கிறிஸ்தவர்கள் தங்களை "அஞ்ஞானிகள்" என்று கூறுவதன்பொருள் தெரியாமையேயாம். இக்காலத்தில் வானசாஸ்திரமுதலிய சாஸ்திரங்களிலும், விவசாய வியாபாரத்திலும், நெய்தொழில்முதலிய கைத்தொழில்களிலும், யுத்த தந்திரங்களிலும், துரைத்தன முறைகளிலும் சிறந்தோராயும் நீராவி சத்தி, மின்சாரசத்தி முதலிய சிலநூதன சத்திகளைக் கண்டுபிடித்து அவற்றைக் கையாளுந் திறத்தில் எக்காலத்தும் ஒத்தோரே இல்லாதாராயும் உள்ள ஐரோப்பியர்களுள் சிறந்த தத்துவ சாஸ்திரிகளும் அதிசயத்துத் தலைசாய்க்கும் வண்ணம் பரமஞானம்

அசுர என்ற கௌரவப்பெயரால் அழைத்தனர். பின்னர் இருஜாதியாரும் ஒன்றுய்க்கலந்து வடஇந்தியாவில் ஒரே ஜாதியாரான போது, கால அடைவில், அசுர என்ற பெயர் மறைய, யாவரும் ஆரியர் என்ற பெயரால் அறியப்பட்டதுடன், அசுர என்ற சொல் "ஆரியப்பகைவர்" என்ற பொருளையும் பயப்பதாயிற்று. Vide, the Admixture of Aryan with Tamilian, by Pandit D. Savariroyan. Ed.

பொதிந்த தமது சமயப் பெருமையை அறியாமையால் தங்களுக்குக் கிறிஸ்தவ ரிட்ட "அஞ்ஞானி" ப்பெயரை யிவர்கள் ஏற்றுக் கொண்டது போலவே, ஆரியரைச் சூழ்ந்து வாழ்ந்த இதர சாதியாரும் ஆரியரிட்ட சூத்திரப்பெயரை ஏற்றுக்கொண்டனர். கிறிஸ்தவர் இந்தியாவில் சிற்சில இடங்களில் மாத்திரம் வாழ்வாராயும் தொகை குறைந்தாராயு மிருக்கின்றனர். அவர்கள் எங்கும்பரவி எண்ணிலு மிகுந்தாலோ இந்துக்களெல்லாரும் "அஞ்ஞானிகள்" என்று தங்களைத் தாங்களே கூறிக்கொள்ளுங் காலமும் வந்துவிடும்.

இது காறுஞ் செய்த ஆராய்ச்சியால், பூர்வகாலதிராவிடருள் திணைவகுப்பே யன்றிச் சாதி வகுப்பு இல்லை என்று கண்டோம். நிலையான சாதிபேதம் இருந்ததாக இவரது பழயநூல்களில் ஆதாரம் ஒன்றும் காணப்படவில்லை. ஆரியர் தென்னிந்தியாவில் நுழைந்து ஸ்திரப்படும் வரை ஒருவகுப்பார் மற்றொரு வகுப்பாரோடு உடனுண்டு உறவாடி வாழ்ந்தனர் என்றும் திராவிடர் ஆரிய ஜாதியைச் சேர்ந்த நாற்பெரும் வகுப்பில் எவ்வகுப்பையுஞ் சேர்ந்தா ரல்லர், ஆரியரைப்போலவே ஒரு தனிப் பெருஞ் சாதியார் என்றும் சூத்திரப் பெயர் இவருக்குச் சுமத்தியது அடாமையும் அறியாமையும் என்றும் மேலே சுட்டிக்காட்டினேன். இனி, ஆரியர் தென்னிந்தியாவில் நிலைத்தபின்னர் திராவிடப் பெருஞ்சாதிக் கட்டுள் உண்டான உலைவும் சிதைவும் என்னவென்று பார்க்கத்தகும்.

௬-வது அதிகாரம்.

*இராமாயண உத்தர காலத்துத் தென்னிந்திய சாதி நிலைமை.

இந்த பாகம் I ஆரியர் நிலைமை, II திராவிடர் நிலைமை என்று பகுத்துக் கூறப்படும்.

I. ஆரியர் நிலைமை.

ஆரியர் வடக்கே யிருந்து தெற்கு நோக்கி வரும் வழியிலே, அங்கங்குள்ள பிற சாதியாரோடு மணம் புரிந்து கலப்புற்றுத் தென்னிந்தியாவை அடைந்தார்கள். தென்னிந்தியாவுக்கு வந்த பின் இங்குள்ள திராவிடரோடு கலந்து பூர்வ ஆரிய சுத்த நிலைமை வர வரக் குறைந்து மிகக் கலப்புற்றவ ராயினர். இது வட தேசத்து ஆரியருக்கும் தென் தேசத்து ஆரியருக்கும் உள்ள உருவ பேதத்தை நோக்குவோர்க்கு நன்கு விளங்கும். ஆரியர் தெற்கே வந்த ஆரம்பத்திலும், பிற்பட்டும், திராவிடரோடு உடனுண்ணுதலும் செய்து வந்தனர். பரத்துவாசர் ஆச்சிரமத்தில் இராமராதி ஆரியரும் விபீடணராதி திராவிடரும் உடனிருந்து விருந்துண்டன ரென்று இராமாயணம் கூறுகின்றது. ஆரியர் அல்லராயினும், ஹிந்து மதஸ்தராய், மாட்டு மாமிசந் தின்னுரா யுள்ள ஜாதி ஜனங்களுடனிருந்து, இன்றும், பொம்பாய் முதலிய வடதேசத்துப் பிராமணர் போசனஞ் செய்கின்றனர். பூர்வத்தில் குடியிருந்த இடம் போதாமையால் தெற்கு வந்து குடியேறிக் கொண்டிருந்த ஆரியர் சிலராயும், அச்சிலருள்ளும் பெரும்பாலார் இயல்பாக ஆடவராயும் இருந்தனர். இக்காலத்தில் ஒரு தேசத்திலிருந்து மறுதேசத்துக்குப் போய்க் குடி யேறுவோர் கூட்டத்

---

*இராமாயண உத்தர காலம்—இராமாயண காலத்துக்குப் பிந்திய காலம்.

தில் ஆடவர் தொகை மாதர் தொகையினும் மிக அதிகமாயிருப்பது போலவே முற்காலத்திலும் இருந்திருக்கு மென்பது தானே விளங்கும். அவ்வாரியர் தஞ் சாதிப் பெண்கள் போதாததினல் திராவிடப் பெண்களைக் கலியாணம் செய்து கொள்வது வழக்கமா யிருந்தது. இவ்வழக்கத்தை அனுசரித்து மநுதர்ம சாஸ்திரம் பிராமணர் தம் சாதிப் பெண்களையே யன்றி மற்றைய மூன்று சாதி மாதரையும் மணஞ் செய்யலா மென்று கூறுகின்றது. இவ்வாறு திராவிட மாதரை மணந்து சந்ததி விருத்தி செய்ததனுலும், சில திராவிடரைத் தீக்ஷை செய்வித்து பிராமணராக்கிக் கொண்டதனுலும், வடக்கே யிருந்து பின்னும் பின்னும் வந்து கொண்டிருந்த தம்மினத்தவராலும் ஆரியர் தொகை பெருக லுற்றது. பெருகித் தம் சனத்தொகை திரள ஆரம்பிக்கவே திராவிடர்களுடைய பெண்களை மணத்தலைப் படிப்படியாக நிறுத்த லானூர்கள்.

தென் தேசத்தை ஆரியர் தங்கள் படைகொண்டு செயிக்கவில்லை யென்றும் திராவிட ராசர்களுள் உண்டாகிய யுத்தங்களில் ஒரு பக்கத்தா ரல்லது மற்ருெரு பக்கத்தாருக்கு உதவி செய்தார்க ளென்றும் முன்னமே சொன்னேன். தம் உதவி பெற்றுச் செயித்த அரசரது இராச்சியத்தில் ஆரியர்கள் தங்கினூர்கள். அவ்வாறு செய்த உதவி காரணமாக, அவ்வரசரது பிரியமும் மற்றையோர் மதிப்பும் உபசாரமும் பெற்றுக் கவுரவமாக வாழ்ந்தார்கள். ஆரியர் மேற்கூறிய யுத்தங்களில் காட்டிய யுத்த தந்திர சாதுரியங்களைக்கண்டு அரசர் தங்கள் புத்திரருக்கு யுத்த வித்தை கற்பிக்கும் ஆசிரியராகவும் படைத்தலைவராகவும் ஆரியரை நியமித்தனர். இது, துரோணர் பாண்டவ துரியோதனுதியர்க்கு வில்லாசிரியராகவும், அவரும் கிருபரும் துரியோதனனது படைத்தலைவராகவும் நியோகிக்கப் பட்டிருந்ததனுல் விளங்கும். இவ்வாறு அரசருக்கு ஆசாரியராதலால், அரசரால் வணங்கப்பெற்று அதனுல் சகல குடிகள் வணக்கத்தையும் பெற்று,

சர்வ ஜன பூஜ்யதைக்கு உரிய ராஞர்கள். லௌகிகத் தொழில் களுள் முக்கியமான போர்த் தொழிலுக் காசிரியரானது பற்றி அவர்கள் வைதீக காரியங்களிலும் படிப்படியாகக் குருக்களாகத் தலைப்பட்டார்கள். ஆரியர் தென் தேசத்துக்கு வருமுன் திரா விடர்கள் சைவ மதத்தினரா யிருந்தனர். சைவ மதம் இங்கு அதி பூர்வமே ஸ்தாபிக்கப் பட்டிருந்தது. ஆனுல் அது அக் காலத்தில் இப்போதிருப்பதற்குச் சற்று வித்தியாச முடையதா யிருந்தது. ஆரியர் புரோகிதராகத் தலைப்பட்ட காலத்தில், பூர்வ மாயிருந்த சைவத்தில் எவ்வளவு தள்ளக் கூடுமோ அவ்வளவையுந் தள்ளி, தள்ளக்கூடாது மிகுந்த பாகத்தைத் தங்கள் மதத்தோடு கலந்து, அதற் கேற்பப் புராணக்கதைகளைப் புனைந்து புகன்று திராவிட ஜனங்களுக்குப் போதிப்பா ராயினர். இவ்வாறு போதித் துப் புரோகிதத் தொழிலை முக்கிய ஜீவன முயற்சியாகக் கொண்டு திராவிட தேச மெங்கும் பல ஊர்களிலும் குடி யேற லுற்ருர்கள். அவர்கள் புரோகிதர்க ளாகவாக, அவர்களது ஆரிய மதமும் ஜாதிக் கொள்கைகளும் பரவலுற்றன. அக்கொள்கை களுக் கிசைவாகத் திராவிட ஜன வகுப்புகள் பல ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டன.

சற்று முன்னே ஆரியர் திராவிடரை ஆரியர் ஆக்கியதாகச் சொன்னேன். பிற சாதியார் பிராமணராகுவது சில காலத்துக்கு முன் வரை நடந்தது. இன்னும் பூரணமாக நின்று விட்டதாகச் சொல்ல இடமில்லை. வைணவ மதாசாரியராகிய ராமாநுஜரும் அவருடைய சீடர்களும் தம்மிடம் தீட்சை பெற்றுத் தங் கொள்கைகளை யநுசரித்த பல சாதியினரையும் பிராமணராகச் செய்திருப்பது சரித்திராசிரியர்களால் நிலை நாட்டப் பட்ட விஷயம். சாத்தானிக ளென்றும் தாதர்க ளென்றும் வழங்கப் படும் சாதியார், மேற் கூறியபடி பிராமணராக்கப் பட்டுக் கொண்டிருக்கும் மத்தியில் ஷை சிஷ்யர்களுள் உண்டாகிய ஒற்று மைக் குறைவாலோ வேறு காரணத்தாலோ, தேவ லோகத்துக்

குப் போய்க் கொண்டிருந்த திரிசங்கு மத்தியாந்தரத்தில் நிறுத் தப்பட்டது போல, நிறுத்தப்பட்டிருக்கின்றனர். நாடகப் புரை யிலே திரைக்குப் பின்னே வேடந் தரித்துக் கொண்டிருந்தோர், அவ்வேடம் அரைகுறையாகத் தரித்து முற்றுப் பெறுமலிருக் கையில் நாடகப் புரையில் கலக முண்டாகித் திரைச் சீலை நீக்கி எறியப்பட்ட போது தோன்றுவது போலச் சாத்தாணிகள் அபூ ரண பிராமண ராகக் காணப் படுகின்றனர். இது அவர்கள் வஸ் திரம் தரிக்கும் மாதிரி ஐயமொன்ற சாதிப் பட்டம், பல வகை யாசாரங்கள் முதலியவற்றை உற்று நோக்குவோர்க்குப் புலப் படாதிராது. தென் கன்னட ஜில்லாவில் இப்போது பிராமணரா யிருப்பவர் ஐந்நூறு வருடத்துக்கு முன் வேறு சாதியா யிருந்தவ ரென்பது சிலாசாசன சோதனையால் வெளிப் பட்டிருக்கிற தென்று டாக்டர் பர்னல் கூறுகிறார். "வட தேசத்திலும் நூதன மாகப் பிராமணராக்கப் பட்ட சாதிகளுண்டு; நமது கண் முன்னே யே பிறசாதித் தலைவர்களும் குடிகளும் முறையே ஆரிய (ரஜபுத் திர) சாதித் தலைவரும் குடிகளும் ஆகின்றார்கள்" என்று ஹண் டர் துரை சொல்லுகிறார். நமது தென்னிந்தியாவில் விசுவ குலப் பிராமண ரென்ற கம்மாளர் தாங்கள் பிராமணருக்கு மேற் பட்ட சாதி யென்று வழக்காடியதும், சௌராஷ்டிர ரென்ற பட்டு நூற்காரர் பிராமணராகச், சாணார் க்ஷத்திரிய ராகப் பாத்தி யங் கொண்டாடுவதும் தற்கால வர்த்தமானங்கள்.

வடக்கே யுள்ள ஆரியருக்கும் தெற்கே யுள்ள ஆரியருக்கும் உள்ள பேதத்தைக் கூறி ஆரியர் நிலைமையை முடித்துவிடுகிறேன். வட தேசத்து ஆரியர் தங்கள் சொந்த ஜாதி சேனையைக்கொண்டு வட தேசத்தைச் செயித்தனர். தெற்கே யுள்ள ஆரியர் ஒரு பக்கத்துத் திராவிட சேனையைக் கொண்டு (மற்றொரு பக்கத்து திராவிட சேனையோடு போர்செய்து) தென் தேசத்தை செயித் தனர். வட ஆரியர் பூர்வ குடிகளைத் தண்டித்து அடக்கி அடிமைக ளாக்கினர்கள். தென் னாரியர் புராதன பிரஜைகளைப்

போதனை சாதுரியத்தால் வசப் படுத்தினார்கள். இரு திறத்தாரும் அநாரியருக்கு ஏவலாளென்று பொருள் படும் சூத்திர னென்ற பெயர் கொடுத்தாலும், வட ஆரியர் அச் சூத்திரனை யிழிவாக வும் கடினமாகவும் நடத்தினார்; தென் னாரியர் அப்படி நடத்த வில்லை. வட தேசத்தார் (பிற சாதிமாதரை அதிகமாக மணந்து கலவாமையால்) பெரும்பாலும் கலப்பற்றவர். தென் தேசத் தவர் (மற்றைச் சாதி கலப்பு மிகுதியால்) அதிகக் கலப் புற்றவர். முன்னையவர் சமஸ்கிருத பாஷையின் சிதைவான பாஷைகளைத் தாய்ப்பாஷைகளாக வுடையார். பின்னையவர் அப்படிப் பட்ட சம்பந்த மில்லாத தமிழ் தெலுங்கு முதலிய பாஷைகளைச்சென்ம பாஷைகளாக வுடையார். முன்னவர் ஆசாரக் குறை வுடைய வர்கள். பின்னவர்ஆசார மிகுதி யுடையவர்கள். வேத காலதில் சர்வ ஆரியரும் மாட்டு மாமிசம் புசித்தவர்களே யாயினும், இக் காலத்தில் முந்தியவருள் சில வகுப்பாரே மாமிசம் புசிப்போர்; பிந்தியவருள் எவ்வகுப்பாரும் யாக வாயிலாக வன்றி மாமிசம் புசியார். வட தேசத்தில் பிராமணர் மிகுந்த திரளா யிருந்த தனால், தாங்கள் மாமிசம் தின்னும் பூர்வ வழக்கத்தை மற்றைச் சாதிகளின் அவ மதிப்புக்கு அஞ்சிக் கைவிட வில்லை. தென் தேசத்திலோ பிராமணர் தொகை குறைவா யிருந்ததனால் மற்றைச் சாதி ஜனங்களின் பழிப்புக்கு பயப்பட்டுப் புலாலுண வைக் கையகல விட்டனர். ஆயினும் "பழக்கங் கொடியது". ஆதலால் மாமிச பக்ஷணத்தை மறுக்க வலியற்றவர்களாய் அவர் கள், புலால் உண்ணுமையை இன்றியமையா உயர்குல வொழுக்க மாகக் கொண்ட மேற்சாதித் திராவிடரது இகழ்ச்சியி னின்று தப்பும் உபாயத்தை நாடி, யாக மென்னும் வியாசத்தால் ஏகதேசமாக மாமிசம் புசிப்பா ராயினர். இது போலவே, தமது "கோரான்" என்ற வேதத்தினால் மாட்டு மாமிசம் புசித்தற்கு அநுமதி யடைந்திருக்கின்ற மகமதியருள் வட தேசத்தவர், தொகை மிகுந்தோ ராதலால், அந்த மாமிசம் புசித்து வருகின் றார்கள். தென் தேசத்து மகம்மதியர் தொகை குறைந்தோ

ராதலால், மாட்டிறைச்சி தின்னும் பறையர் முதலியோரோடு தம்மையும் சேர்த்துப் பிறசாதியார் நீச ரென்று இகழ்வார்க ளென்ற பயத்தாலும் அப்பயங் காரணமாக ஏற்பட்டு விட்ட வழக்கத்தாலும் மாட்டுமாமிசத்தைத் தொடா திருக்கின்றனர்.

II. திராவிடர் நிலமை.

முன்னமே சொல்லியபடி ஆரியர் வருமுன் திராவிடருள் சாதிபேத மென்பது இருந்ததில்லை. நிலம் பற்றி வகுக்கப்பட்ட குறவர், இடையர், மறவர், உழவர், பரவர் என்ற வகுப்பினர்க ளே யல்லாமல், தொழில் பற்றிப் பிரிக்கப்பட்ட கொல்லர், தச்சர், வண்ணார், அம்பட்டர், முதலிய பிரிவினரு மிருந்தனர். எல்லாத் தேசங்களிலும் குருமார், போர்வீரர், வர்த்தகர், கிருஷிகர், பல தொழிலாளிகள், ஏவலர், வேலையாட்கள் என்ற வகுப்பார் இருப்பது போலவே தென்னிந்தியாவிலும் இருந்தனர். இவர்கள் ஆரியர் வழக்கத்தை அநுசரித்து, ஆதிசைவஅந்தணர் முதலிய பல சாதிகளாகத், தங்களுடைய பல வகுப்புக்களையும் பெயரிட்டு வழங்க லுற்றார்கள். அவ்வாறு வழங்கலுற்ற போது, வகுப்புக்கள் நான்கு சாதிகளுக்குள் அடங்காமல் நாலாயிரஞ் சாதிகளாயின வென்று சொல்லும்படியாக எண்ணிறந்த பல சாதிக ளாயின.

ஐரோப்பிய பாதிரிமார் கிறிஸ்துமதத்தினால் இந்தியாவுக்கு உண்டாகக் கூடிய நன்மைகளில் அதை அநுசரித்தவர்கள் ஜாதி வித்தியாசக் கொடுமையிலிருந்து நீங்கி விடுவதொன்றென்று வற்புறுத்திக் கூறுவது பிரசித்தமானது. கிறிஸ்துமதம் அவ்வாறு ஜாதி வித்தியாசங்களை யொழிக்கப் புகுந்த முயற்சியில், அது முன்னிருந்த ஜாதி வகுப்புகளை இரண்டு மடங்காக்கி யிருக்கிறது. முன் பிராமணர் வேளாளர் மறவர் முதலிய பலஜாதிகளாயிருந்தவர், கிறிஸ்து மதத்தினால் ஹிந்து பிராமணர் கிறிஸ்தவ பிராமணர், ஹிந்து வேளாளர் கிறிஸ்தவ வேளாள ரென்றாக, ஜாதிகளின் தொகை முன்னிருந்ததற்கு இப்போது இரட்டியாயிருக்கிறது.

மேற் கூறியதனால் ஆதிசைவ அந்தணரான பட்டர் குருக்க ளென்ற திராவிடப் பிராமணர்கள் தங்களுக்குக் குறைவேற்பட்டதாகக் கருத வேண்டிய தில்லை. அவர்கள் ஜாதியால் ஆரியப் பிராமணருக்குக் கீழ்ப்பட் டிருக்கவு மில்லை, மேற்பட்டிருக்கவு மில்லை. இவ்விரு வகுப்பாரும் சாதியால் ஒருவருக் கொருவர் உயர்வு தாழ்வு இல்லாராயினும், வேறு வகையால் உயர்வு தாழ்வு உடைய ரல்லரோ வென்றால், இருதிறத்தாருக்கு முள்ள சில முக்கிய சாதியாசார *பேதாபேதங்களைக் கூறுகின்றேன். அவற்றைக்கொண்டும் பிறவற்றைக்கொண்டும் நீங்களே ஊகித்து அவர்களது உயர்வு தாழ்வை நிச்சயித்துக் கொள்ளுங்கள். "ஐம் பெரு வேள்வியும் அறுவகைத் தொழிலும் சோடசகிரியையும் ஸ்நானுநஷ்டான ஜெப தப ஹோம தேவதாபூசை முதலிய நித்திய நைமித்திய கருமங்களும் (சிற்சில பாகங்களிற் பேதப்படினும்) பெரும்பாலும் ஆரிய (ப்பிராமண) ருக்கும் ஆதிசைவ (அந்தண) ருக்கும் பொது" ஆசாரங்கள். ஆரியப் பிராமணர், வேதகாலத்தில், மாமிச பட்சணத்தோடு சோமபான மென்ற மதுபானமுஞ் செய்தவர்கள். வட தேசத்தில் அவர் வகுப்புகளுக்குள் சில வகுப்பினர் இன்னும் மாமிசம் புசிக்கின்றனர். அன்றி, அவர்கள் எத்தேசத்தின ராயினும் யாக வாயிலாக மாமிசம் புசிக்கின்றனர். சொல்லவும் கேட்கவுங் கூசும் அசங்கதமான பவுண்டரீக யாக மென்ற துன்மார்க்க கிருத்திய முஞ் செய்கின்றனர். ஆதி சைவ அந்தணரோ தோன்றிய நாள் தொட்டு மது மாமிசங்களைத் தொடவுஞ் செய்யாதவர். பவுண்டரீக யாகம்போன்ற எவ்வகையான அசப்பிய கிரியைகளையும் செய்தறியாதவர். ஆலயங்களில் இந்த ஆதி சைவ அந்தணர் தொட்டுப் பூசை செய்யும் மூர்த்திகள் உள்ள கர்ப்பகிரகத்துக் குள்ளே ஆரியப் பிராமணர் இன்றும் பிரவேசிக்கப் பெறு திருப்பதினால் முன்னவர் பின்னவரைக் கீழ் சாதியாகக் கருதி அவ்வாறே

*பேத + அபேதம் = வேற்றுமை ஒற்றுமை.

நடத்து கின்றன ரென்பது விளங்கும். அக்காலத்தில் ஆதி சைவ அந்தணர் மற்றைய திராவிட வகுப்பா ரெல்லாரினும் மேற்சாதி யாயினது போல, இக்காலத்தும் ஒரே சாதியுள் ஒரு பாகத்தார் மற்றைப் பாகத்தா ரினும் மேற் படுவதைக் காணலாம். செங்கல்பட்டு ஜில்லாவில் சைவ வேளாளருள் ஒரு சிலர் பண்டாரங்க ளென்று சொல்லப்படுகின்றனர். இவர்கள் தென் ஜில்லாக்களில் தொண்டை மண்டல முதலிமார் என்று வழங்கும் சாதியாரின் இனத்தினராய் அந்தச் செங்கல்பட்டு ஜில்லாவில் கொண்டை கட்டி வேளாளர் அல்லது கொண்டை கட்டிக ளென்று கூறப்படும் பரம்பரைச் சைவ வேளாளருக்குப், பரிசாரகராகவும் பூசைத் தவசிப் பிள்ளைக ளாகவும் இருக்கின்றனர். இப் பண்டாரங்கள் தாம் சமைத்து ஷை கொண்டை கட்டிப் பிரபுக்களை உண்ணச் செய்வதே யல்லாமல் தாங்கள் அப்பிரபுக்கள் வீட்டில் சாப்பிடுவ தில்லை. சைவ வேளாளருள்ளே ஒரு சிலர் தாம் மேற் கொண்ட பரிசாரகத் தொழில், பூசைக் கிடம் பண்ணல் முதலிய தொழில்களுக் குரிய ஆசாரத்தை மேற்கொண்டு, வர வர, அவ்வாசாரங் காரணமாக மற்றைய தம்மினச் சைவரோடு உடனுண்ணல் முதலியவற்றை நீக்கியிருப்பது போலவே, ஆதி சைவ அந்தணர் தாம் மேற்கொண்ட தேவார்ச்சனை முதலிய வைதிக கிரியைகளின் நிமித்தம் மற்றைய திராவிடரினும் விசேஷ ஆசார முடையராய்க் காலக்கிரமத்தில் உயர்சாதி யாயினர். சைவ வேளாளருள் பண்டாரங்கள் ஓதுவார் குருக்கள் என்போர் உண்டு. ஆதி சைவ அந்தணர் தென் ஜில்லாக்களில் பட்ட ரென்றும் வட ஜில்லாக்களில் குருக்க ளென்றும் கூறப் படுகின்றனர். இருவகைக் குருக்களும் பூணூ லணிதல் தீக்ஷை செய்தல் முதலிய பல ஒற்றுமையான ஆசார முடையார். சைவ குருக்களே ஆதிசைவ குருக்க ளானார்கள் போலும். செங்கற்பட்டு ஜில்லாவிற் போலல்லாமல் தென் ஜில்லாக்களி லுள்ள சைவ வேளாளப் பண்டாரங்கள் மற்றைய சைவ வேளாளர் வீட்டில் புசிக்கும் வழக்கத்தைக் கைவிடாதிருக்கின்றனர்.

ஒரே சாதியார், தென்னிந்தியாவில், ஒரு பாகத்தில் கீழ்ச் சாதிகளாக மதிக்கப்பட்டும் மற்றைப்பாகத்தில் அவ்வாறு மதிக்கப் படாமலும் இருக்கின்றனர். திருநெல்வேலி ஜில்லாவிலும் மதுரை ஜில்லாவிலு முள்ள சாணர், மறவர் இடையரினும், தாழ்வாக மதிக்கப்படுகின்றனர். அங்கே கோவில்களில் சைவ வேளாளர் எவ்வளவு தூரம் உள்ளே போகலாமோ அவ்வளவு தூரம் மறவர் இடையர் முதலிய அநேக சாதிகள் போகின்றனர். சாணர்களோ அவ்வளவு தூரம் போகும் வழக்க மில்லை. வட ஜில்லாக்களிலோ சாணர் மேற் கூறியபடி கீழ்ச்சாதியா ராக மதிக்கப்படுகிற தில்லை. கோவில்களுள் மற்றைய சாதிகளோடு சமமாகப் போய்ச் சுவாமி தரிசனஞ் செய்கின்றனர். தென் ஜில்லாச் சாணரே வட ஜில்லாக்களுக்குச் சென்றால் அங்குள்ள கோவில்களுள் தடை படாது சென்று சுவாமி தரிசனஞ் செய் கின்றனர். மேற் கூறிய மறவர் இடையரினும் கீழ்ப்படாத சாதி ஜனங்களுடன் வடஜில்லாச்சாணர் கூட இருந்து விருந்து அருந்து கின்றனர். இதனைச் சேலம் ஜில்லா, திருச்செங்கோடு தாலூக்கா, புன்செய்ப்புதுப்பாளயம் முதலிய இடங்களில் விசாரித் தறிய லாம். தென்சில்லாக்களிலுள்ள மறவர்இடையர் முதலிய சாதிகள் ஒழுக்கத்துக்கு அச்சில்லாக்களிலுள்ள சாணரொழுக்கம் குறைவு பட்டதாகத் தோன்றவில்லை. உயர்ந்த சாதிகளுக்குரிய ஒழுக்கங் களுள் மாமிசம் புசியாமையும் விதவைகள் கலியாணஞ் செய்யா மையும் முக்கியமானவை. இவ்விரு வழக்கங்களும் நல்லவையோ தீயவையோவென்பதைப்பற்றி நான் இங்கே பேசவில்லை. அவை களை ஆராய்வதற்கு இது இடமு மன்று. இவ்வழக்கங்கள் தற் காலம் வரை இந்தியாவில் சாதி யாசாரங்களுள் மேற்பட்டவை. களாகக் கருதப் படுகின்றன வென்பது, நான் விவகரிக்கப்புகுந்த விஷயத்திற்கு அவசியமாதலால், நான் அவ்வழக்கங்களை இங்கெ டுத்துக் கூறினேன். கள்ளுண்ணாமை, விதவாவிவாகஞ் செய்யாமை முதலிய உயர் குல வழக்கங்களுடைய சாணர் பல சிறந்த நல்லொ ழுக்கங்க ளுடையவர்கள். ஆச்சரியப்படத்தக்க விடாமுயற்சி யுடையவர்கள். இப்படிப்பட்ட குணங்கள் உடைய சாதி, மெலியா

ளை வலியார் வருத்த இடங்கொடாத ஆங்கிலேய இராசாங்கத்தில், மேன்மையடைய ஆரம்பித்திருப்பது இயல்பே. இச்சாதியாருள் சிலகாலமாகக் கல்வியும் செல்வமும் பெருகி வருகின்றன. இவர்கள் தங்களைப்போன்ற வடஜில்லாச் சாணர்களை அங்குள்ள பிறசாதியார் நடத்தும் முறைகளுக்குக் குறைவாகத் தங்களைத் தங்கள் ஜில்லாக்களில் உள்ள பிறசாதியார் நடத்துவதை நோக்கி மனங் கசந்து தங்கள் சாதி நிலைமையை மேன்மைப் படுத்த முயல்கின்றனர். முன்காலத்தில் திராவிட சாதி வகுப்பாருள் சில வகுப்பார் கல்வி அறிவு ஒழுக்கங்களில் உயர்ந்து மற்றைய தம்மோடொத்த வகுப்பாரினும் உயர்வுற்றது போலவே இவர்களும் காலக் கிரமத்தில் உயர் வடைவார்களென்பது நிச்சயமானதேயன்றித் தடுக்க முடியாது. சிலகாலத்தில் இவர்கள் பிராமணரினும் உயர்வடைந்தாலும் ஆச்சரியப்படக் காரண மிராது. ஏனெனில் ஒருசாதியின் உயர்வை அச்சாதி மாதர்களின் நிலைமையைக்கொண்டு அளக்கலாமென்ற விதிப்படி, இவர்கள் உயர்வடைதற்பாலராயிருக்கின்றனர். எவ்வாறெனில் ஒவ்வொரு சாதியிலும் படிக்கின்ற பிள்ளைகளில் ஆண்பிள்ளைகள் தொகையோடு பெண்பிள்ளைகள் தொகையை ஒப்பிடுங்கால் உள்ள பிராமணப்பெண்கள் தொகையினும் சாணரப்பெண்கள் தொகை மிக அதிகமாக இருக்கின்றது. மேற்கூறியவாறு தென்ஜில்லாச் சாணர் நிச்சயமாகவும் தடுக்க முடியாதபடியாகவும் உயர் வடையு முண்மையை மனத்தில் ஊன்ற வைத்துப், பிறசாதியாருள் அறிவாளிகள் மேற்கூறிய முயற்சிக்கு உதவி செய்யாராயினும் தடையேனுஞ் செய்யாதிருத்தல் தகுதி. சாணருள்ளும் விவேகிகள் "அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா" என்பதை ஞாபகத்தில் நீங்காமல் வைத்து அம்முயற்சியை இடைவிடாது செய்யுங் கடமைப் பாடுடையார். இதற்கு விரோதமாக இருதிறத்தாருள்ளும் அவிவேகிகளின் ஆதிக்கம் மிகுந்திருக்கின்றது என்பது "சான்சத்திரியப் பிரசண்ட மாருதம்", "........ஐயருக்கு.........அடி" என்று வெளிப் பட்ட புத்தகங்களாலும் பிறவற்றாலும் புலப்படுகின்றது. மேற் சாதிக்காரர் தங்களைக் கிட்ட நெருங்க வொட்

டாமல் தடுப்பதனால் சாணார் மனம் புழுங்கினவராய் சத்திரிய ரென்று தங்களுக்குத் தாங்களே பெயரிட்டுக் கொள்ளுகின்றனர். இதன் உட் பொருள் யாதென்று தெரியின், மேற்சாதிகள் என் பார்க்குந் தாங்கள் மேற்பட்டவரென்று வாதிப்பது, அவர்கள் தங்களைச் சமமாக நடத்தவேண்டுமென்பதே. இது, பத்துகேட்டால் எட்டாவது கொடார்களா வென்றதை யொத்திருக்கின்றது.

அந்தோ! இவர்கள் பேதைமையை என்னென்று கூறுவது? இவர்கள் தங்களையும் வேளாளர் மறவர் இடையர் முதலிய பிற திராவிட வகுப்பினரையும் "நாங்கள் மேற் சாதி" "நாங்கள் மேற் சாதி" என்று சண்டை யிடும்படி செய்வது பிராமணரா லேற்படுத்தப்பட்ட சாதி வித்தியாச மென்று தெரியாராய்ச், சத்திரிய ரென்று பெயர் பூண்டு, உண்மையாக அந்த பிராமணருக்குக் கீழும் ஆகாமல் மேலும் ஆகாமல் உள்ள தங்குல மேன்மைக்குக் குறைவாகத், தங்களுக்கு அந்தப் பிராமணரை மேலானவர்களாக்கவும் தம்போலவே திராவிடப் பெருஞ் சன சமுகத்தில் சேர்ந்தவர்களாகிய வேளாளர், மறவர், இடையர் முதலியோரைக் கீழானவர்களாக்கவும் ஏககாலத்தில் முயன்ற இரட்டி அநியாயத்துக்கு இணை ஏதாயினும் எங்காயினும் உண்டோ? அன்றியும், இவர்களது அறியா முயற்சி எய்வானை விட்டு அம்பை நோவது போலவும் வேரை விட்டுக் கொப்புக் குழைகளைத் தறிப்பது போலவு மிருக்கின்றது. சாணார்தாம் வேளாளர், மறவர், இடையர் முதலிய சாதிக்குக் கீழ்ச் சாதியா ரல்லர். சாணார் தம்மை க்ஷத்திரிய சாதி யென்றும், கம்மாளர் தாம் விசுவகுல பிராமணரென்றும் எழுதிப் பிரசுரம் செய்யும் நூல்போன்ற நூல்கள் யாதொரு நற்பிரயோசனமும் பயவாதனவாய்க் கேவலந் தீங்குகளையே விளைக்கத் தக்கன. சாதி யென்பது வடக்கேயிருந்து வந்த அந்நியரால் ஏற்படுத்தப்பட்டு இத்தேசத்து ஜனங்களை அடிமைகளாகக் காட்டும்படி இடப்பட்ட அடையாள மென்றும் அதற்கு உண்மையான ஆதார மொன்று மில்லை யென்றும் அது அநீதமான தென்றும் சரித்திர பூர்வமாக நிரூபித்தலும், "உயர்ந்த சாதி" "தாழ்ந்த

சாதி" என்னும் பேதத்தைச் சிறிதும் பாராட்டாமல் எல்லாச் சனங்கள் விஷயத்திலும் ஒரே விதமாக பாரபக்ஷ மின்றி நீதி செலுத்தும் ஆங்கிலேய அரசாட்சியில், ஆண்டவன் அடிமை என்பவற்றைக் குறிப்பிக்கும் சாதி ஏற்பாடுகள் சிறிதும் இடம் பெறுவதில்லை யென்பதை நன்கு விளக்குதலுமே, சாதிக் கொடுமைகளை நீக்குதற்குத் தக்க வழிகள். "தன்னைத் தலையாகச் செய்வானுந் தான்" என்பது சாதிகள் விஷயத்திலும் பொருந்தும். கீழ்ச்சாதி ஜனங்களுள் ஆடவரே யன்றிப் பெண்டிரும் மேன் மேலும் அதிகமாகக் கற்றலும், விவசாயம் வியாபாரம் கைதொழில் உத்தியோக முதலிய ஜீவன முயற்சிகளில் மேன்மை யடையும்படி ஊக்கத்தோடு விடாமுயற்சி செய்தலும், தங்கள் தேகம், வஸ்திரம், வீடு, ஊர் முதலானவைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளலும், சன்மார்க்கத்திலும் நாகரிக நடையிலும் விருத்தி யடைதலும், "பொறுத்தார் பூமி யாள்வார்" என்பதை நீங்காமல் மனத்தில் வைத்துப் பொறுமையோடு இருத்தலுமே அவர்கள் " மேற்" சாதிகளின் நிலைமை யடைவதற் குரிய உபாயங்கள். உண்மையாக இல்லாத பாத்தியதையைக் கொண்டாடுவது, ஓர் அரசனிடத்தில் பெரிய உத்தியோகம் பெற்ற ஒரு தாசி புத்திரன் நான் தாசி புத்திரன் அல்லன் என்று ஊர் சுற்றி முரசறைவித்துப் பிரசித்தப் படுத்தும் படி அவ்வரசனை வேண்டினனென்ற கதையை ஞாபகப் படுத்துகின்றது. ஒவ்வொரு பிரதேசத்திலும் வேசியர்களின் மக்களும் சரியான சம்பந்த மல்லாத சம்பந்தத்தாற் பிறந்த பிள்ளைகளும், அவ்வப் பிரதேசத்தில் பெருமிதமா யுள்ள சாதிகளோடு இரண்டு மூன்று தலைமுறைகளில் கலந்து விடுவது வழக்கமா யிருக்கின்றது. உத்தம குலாசாரந் தவறாத சாணார்கள் இவ்வாறு கலப்பவர்களிலும் எவ்வளவோ மேம்பட்டவர்களென்பது சொல்லாமலே விளங்கும். மேற் கூறிய சங்கர சாதியாருக்கு இடங் கொடுப்போர்கள். அச் சங்கர சாதிகளும் சாணாருக்குச் சற்று உயர்ந்தும் தாழ்ந்தும் ஒத்தும் உள்ள வேறு சாதியார்களும் போல, அச் சாணாரும்

கோவில்களில் சுவாமி தரிசனஞ் செய்தற்கு ஏனோ இணங்குகின்றார்களில்லை!

ஆழ்ந்து ஆராயுங்கால், அவ்வாறு இணங்காததற்கு, மேலே விளக்கியபடி, குலாசாரக் குறைவு காரண மாகவு மில்லை. வேத காலத்தில் மாடு தின்பதை உத்தம குலாசார மாக்கி இப்போது சில கால மாக அதையே நீசச் சாதி வழக்கமாகச் செய்து விட்டுத் தா னென்றும் தெரியாததுபோ லிருக்கும் வழக்கமே காரண மாக இருக்கிறது. வழக்கங்கள் நல்லவைக ளாயின் அவைகளைப் போற்றுதலும், தீயவைக ளாயின் அவைகளை நீக்கலும் விவேகிகள் கடமை. குழந்தைப் பலி கொடுத்தல், உடன் கட்டை யேறல் முதலிய சில கொடிய வழக்கங்கள் சிலகாலத்துக்கு முன்வரை நிகழ்ந்து, ராசாங்கத்தாரால் நிறுத்தப்பட்டொழிந்து விட்டன. பெண்களைப் படிப்பித்தல் சில காலத்திற்கு முன் இல்லாதிருந்தும் இப்போது வழக்கமாகி விட்டது. இவ்வாறே இன்னும் எஞ்சியுள்ள தீய வழக்கங்கள் நிறுத்தப் படுதற்கும் நல்ல வழக்கங்கள் அநுசரித்து நிலை நாட்டப் பெறுதற்கும் உரியன. அவ்வாறு நூதனமாக அநுசரிக்க வேண்டிய நல் வழக்கங்கள் பல வுள. அவற்றுட் பின்வருவன இரண்டும் நம் தேசாபி விருத்திக்கு இன்றியமையாதன:— (1) கல்வி, செல்வம், உத்தியோகம், வியாபாரம், தொழில், முதலியவற்றின் பொருட்டு கடல் கடந்து இங்கிலாந்து முதலிய தேசங்களுக்குச் சென்று திரும்பு வோரை, வழிப்பறி, கொலை யாதிப் பெருங் குற்றங்கள் செய்து நியாய தண்டனைக் குட்பட்டுக் காராக் கிரகப் பிரவேசஞ் செய்த மாபாதகர்களினும் இழிந்தவர்களாகச் சாதிப்பிரோட்டராக்காமல், சாதி சிரோட்டராக உபசரித்து கௌரவப் படுத்தல்; (2) மேற்குல ஒழுக்கங்களிலும் சர்வதேச சர்வமத சம்மதமான சன்மார்க்காநுட்டானத்திலும் நாளடைவிலுயர்ந்து கல்வி செல்வம் நாகரிகம் ஆகியவைகளில் கால அளவில் முற்பட்டு வரும் எந்தச் சாதியாரையும் அவர் விரும்பும் வண்ணம் ஆலய சேவை முதலியவற்றிக்கு அருகராக்கி முன்வர விருத்தல்.

4-வது அதிகாரம்.

ஜாதி யிலக்கணமும் தென்னிந்திய ஜாதி நிலைமையும்.

தென்னிந்தியாவிலுள்ள ஜனங்களுள் ஆரியர் ஒரு சாதி யாரென்றும் மற்றவர்கள் அச்சாதியைச் சேர்ந்தவர்க ளல்ல ரென்றும் ஆரியர் ஒழிந்த பல வகுப்புத் திராவிடரெல்லாம் ஓரே சாதியோ வென்பதைப் பின்பு விசாரிப்போ மென்றும் அப்படி விசாரிக்கும்போது சாதி யின்ன தென்று வரையறுக்கப் படவேண்டுமென்றும் சொல்லி யிருந்தேன். ஆதலால் இப்போது சாதியின் இலக்கணத்தை ஆராய்வோம். சாதி(1) இயற்கைச் சாதி (2) செயற்கைச் சாதி யென்று இருவகைப்படும். நீண்ட முக மும் நெடுகி நெருங்கிய கொம்பும் தொங்கிய கோசமும் உள்ள ஆல்ம்பாடி மாடு, பரந்த முகமும் மிக நீளாமலும் நெருங்காமலு முள்ள கொம்பும் ஒட்டுக் கோசமு முள்ள காங்கேய நாட்டுமாடு போன்ற வெவ்வேறான மாட்டுச் சாதிகள் இயற்கைச் சாதிக்கு உதாரணங்கள். இவ்வாறே மனிதருள்ளும் பல இயற்கைச் சாதி களுண்டு. தடித்துத் தொங்கு முதடு, சப்பை மூக்கு, பெருத்துப் புடைத்த கன்ன மோவா யெலும்புகள் முதலிய உருவ விசேட முடைய நிகிரோவரும், சாய்ந்த கண் பரந்து தட்டையான முகம் முதலிய அடையாளமுள்ள சீனரும் வெவ்வேறான இயற் கைச் சாதிகள். இவ்வாறு இயற்கையான பேத மில்லாமல் மனி தரால் ஏற்படுத்திய வித்தியாசமுடைய சாதிகளே செயற்கைச் சாதிகள். ஆனால் தென் தேசத்து ஆரியர் மேலே சொல்லிய படி நெடுங் காலம் திராவிடப் பெண்களைப் பல நூற்றாண்டுகளாக மணந்து மிகவுங் கலப்புற்றுததிராவிடரினின்றும் பிரித்தறியக் கூடிய இயற்கை அடையாளங்கள் அனைத்தையும், முற்றும் அல்லது சற்றுக்குறைய முற்றும், இழந்திருக்கின்றனர். திராவிட

ருள் அடங்கிய வேளாளர் மறவர் இடையர் கம்மாளர் முதலிய சாதிகள், பல செயற்கைச் சாதிகளாயும், ஒரோ இயற்கைச் சாதியாயுமிருக்கின்றனர். பிராமணரிற் சிலர், வேளாளரிற் சிலர், மறவரிற் சிலர், இடையரிற் சிலர், கம்மாளரிற் சிலர்,மற்றைய தென்னிந்திய சாதிகளொவ்வொன்றிலும் சிலர் ஆகிய இவர்களை ஒரோ வகையாகச் சவரம்செய்வித்து, ஒரோ விதமாக உடை உடுப்பித்து, ஒருசேரத்திரட்டினால் அவர்களுள் இன்னார் இன்ன சாதி, இன்னார் இன்ன சாதியென்று' மனித நூல்' வல்லாரோ பகுத்தறிய மாட்டார்கள். சற்று முன் நிகிரோவ சீன சாதிகளைப் பற்றிக் கூறிய போது, வேண்டுமென்றே அவர்களது நிற வேற்றுமைகளைக் கூறாது விடுத்தேன். நிகிரோவர் கரி நிறத்தினர். சீனர் மஞ்சள் வருணத்தினர். அமெரிக்கா இந்தியரென்ற சாதிகள் இவ்விருசாதியினின்று பிரித்துக் காட்டும் உருவ பேதத்தோடு செம்பு நிறமுமுடையார். இம்மூன்று சாதி மனிதரையும் முன் சொன்னபடி ஒரோ வகையாகச் சவரஞ் செய்வித்து உடையுடுப்பித்தலேயன்றி' எல்லாருக்கும் ஒரோ வருணம் பூசி விட்டாலும், இவர்களை வெகுலகுவாக இன்னின்ன சாதியென்று யாவரும் பகுத்தறியக் கூடும். இவ்வாறாக வடிவபேதம் பற்றி யாராயுங்கால் திராவிடரெல்லாம் ஒரோ இயற்கைச் சாதியென்பது விசிதமாகின்றது.

மேலே, பூர்வத்தில் ஆரியர் பிறசாதி மக்களைப் பிராமணராக்கிவந்தனரென்றும் இன்னும் பிறசாதியார் ஆரிய சாதியா ராவது நின்று விடவில்லை என்றுஞ் சொன்னேன். இதுபோலவே திராவிடருள் ஆதியில் கீழ்ச் சாதிகள் மேற்சாதிகளாகி வந்தனரென்பது "கள்ளன் மறவன் கனத்த அகம்படியன் மெள்ள மெள்ள கிட்டி வந்து வேளாள னானே" என்ற மூதுரையாலும் இன்னும் கீழ்ச் சாதிகள் மேற் சாதிகளாகி வருகின்றன வென்பது பின் வருந் திருஷ்டாந்தங்களாலும் விளங்கும். பல ஜில்லாக்களில் பல சாதிகளில் செட்டி வகுப்பார்களிருக்கிறார்கள். இவர்கள் ஆரம்பத்தில் செட்டித் தொழில் செய்ததனால் செட்டிகளானவர்கள். பின்பு அவரவர் தாம் எந்தச் சாதிக்குரியவர்களோ அந்தச் சாதி

க்கு மேற்பட்ட சாதிச் செட்டிகளென்று கூறி உரிமை பாராட்டி நாளடைவில் அவ்வாறே அங்கீகரிக்கப் பட்டிருக்கின்றனர். திருநெல்வேலி ஜில்லாவில் சில செட்டி வகுப்பாரிருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் உயர்சாதிச்செட்டிகளென்று சொல்லிக்கொள்வதேயல்லாமல் பெரும்பாலும் அவ்வாறே அங்கீகரிக்கப்பட்டும் இருக்கிறார்கள். இந்தச் செட்டி வகுப்பைச் சாணர் தங்கள் இனத்தவரே யென்று பல நியாயங்களால் வெளிப்படுத்துகின்றனர். இச் செட்டிவகுப்பைச் சேர்ந்த ஸ்திரிகளின் உடைகளும் நகைகளும் சாணரப் பெண்களுடைய உடை நகைகளை முற்றும் முன் ஒத்திருந்தன வென்பதும், இன்னும் சிலபாக மொத்திருக்கின்றன வென்பதும், அச் செட்டிப் பெண்களுள் அதிக வயது சென்ற பெண்பிள்ளைகளின் உடை நகைகளைச் சாணரது உடை நகைகளோடு ஒத்திட்டு நோக்குவதனாலும் இரு வகுப்பாரிடையே நெடுங்காலம் வாழ்ந்துள்ள விருத்தர்களை விசாரிப்பதனாலும் விளங்கும். இச் செட்டிவகுப்பார் கலியாண முதலிய விசேட காலங்களில் செய்யும்பல லௌகிக வைதிக கிரியைகள் அக் காலங்களில் சாணர்கள் செய்யும் கிரியைகளை முன்னே முற்றும் அல்லது சற்றுக் குறைய முற்றும் ஒத்திருந்தன வென்றும் பெரியோர் கூறுகின்றனர். முன்னிருந்த நடை உடை நகைகள் முதலியவை ஒரு சாதி வகுப்பாருள்ளேயே சிறிது காலத்துள் மாறியிருப்பதற்கு உதாரணங்கள் பல உண்டு. முதலிமாரென்ற தொண்டைமண்டல வேளாளருள் ஆடவரும் முன் காலத்தில் காது வளர்க்கும் வழக்க முடையாராயிருந்தனர். இது மதுரை ஆயிரக் கால் மண்டபத்து முகப்பில் அரியநாயக முதலியார் உருவமாக நிற்கும் சிலையையும் மற்றும் பழைய உருவச் சிலைகளையும் நோக்குவோருக்கு விளங்கும். அவ்வாறு காது வளர்த்த தம் மூதாதையரைப் பார்த்திருந்த ஞாபக முடைய விருத்தர் சில காலத்துக்கு முன்னிருந்திருக்கின்றனர். இப்போது நமது கண்முன்னே அம் முதலிமார் மற்ற வேளாளர் இவர்களுடைய பெண்பிள்ளைகளில், முக்கியமாக மதுரைக்கு தெற்கே வசிப்பவர்களில், காது வளர்த்

துள்ளோர் பலரிடையே வளராதார் சிலரு மிருக்கின்றனர். பின்னவர் தொகை வர வரப் பெருகி வருகின்றது. தொண்டைமண்டலவேளாள ஆடவர் போல மற்றைய வேளாளரையும் பிற திராவிட வகுப்புகளையும் சேர்ந்த ஆண்மக்கள் காது வளர்க்கும் வழக்கம் ஆதியிலிருந்திருக்கிறதென்பது பல ஆலயங்களிலுள்ள பழைய உருவச் சிலைகளால் விளங்குகின்றது. மேற் கூறிய செட்டி வகுப்பார் இன்னின்ன ஊரின ரென்று சுட்டிக் கூருததற்குக் காரணம் அவ்வாறு கூறுவதனுல் அவ்வகுப்பினருக்கு வீணை மனவருத்த முண்டாக்க லாகாதென்பதே. ஆயினும் சாதிப் பற்றில்லாமல் கீழ்ச் சாதிகள் மேற் சாதிகளாக மாறிவரும் உண்மை நிகழ்ச்சியை அறிய விரும்புவோர் பொருட்டு அச் செட்டி வகுப்பார் ஒட்டப்பிடாரம் தாலூகாவி லிருக்கிருர்க ளென்ற மட்டும் சொல்லி நிறுத்துகின்றேன். இவ்வாறு திருநெல்வேலி ஜில்லாவிலேயே வேறு தாலூக்காக்களிலும் இதர ஜில்லாக்களிலும் இருக்கலாம். கோயம்புத்தூர் ஜில்லாவில் பள்ளர்களுள்ளே மூப்பரென்ற பட்ட முண்டு. சாணுருள்ளும் அந்தப் பட்ட முண்டு சாணுருள்ளும் வேளாளர் முதலிய மற்றைய சாதிகளுள்ளும் வர்த்தகம் புரிவோர் செட்டிகளென்று கூறப்படுவ துண்டென்று சொல்லி யிருக்கிறேன். பள்ளமூப்பர் சாணுர மூப்பராய், அந்தச் செட்டிகளாய்ப், பின் வேளாளச் செட்டிகளாய், அந்த ஜாதிப் பிள்ளைமாராய்ச், சைவக்குருக்களாய்க், கடைசியாக ஆதி சைவக் குருக்களாய்க் கால கிரமத்தில் மாறி யிருத்தல் கூடாமை யன்று என்பதை, ராமாநுஜமதத்தில் சேர்ந்த பல கீழ்ச்சாதியாரும் பிராமணரா யிருப்பதைக் கொண்டு ஊகிக்கலாம். இடையர் பறையர் முதலியோருள் சிலர் உத்தியோகம் காரணமாக வாவது வேறு காரணமாகவாவது மேன்மையடையும் போது தங்களைப்பிள்ளைகளென்று கூறிக்கொள்ளும் வழக்கம் பலருக்குந் தெரிந்தது. இப்போது முக்கியமாக மாத்துவப் பிராமணரின் சாதிப் பட்டமாகிய இராயர் என்ற பெயர் பூண்டு (இராயர்அப்பாஜி கதைகளில் கூறப்படும்) இடைச் சாதியான் ஒருவன் அரசனுக இருந்தா

னென்பது கன்ன பரம்பரையான விஷயம். தென்னிந்தியாவை யாண்ட சேர சோழ பாண்டியர் முதலிய அரசர்கள் பெரும்பாலும் வேளாளராக இருந்தன ரென்று பழைய கல்வெட்டு, தாம்பிர சாஸனங்கள் முதலிய வற்றால் விளங்குகின்றது.

சாதி வித்தியாச விஷயமாக இன்னுஞ் சில கூற வேண்டிருப்பவற்றைக் கூறி முடித்து விடுகிறேன். சாதிப்பிரிவு வேதத்தின் அந்தியகாலத்தில் ஆரம்பித்திருக்கலாம். ஆயினும் இப்போதிருக்கிறபடி யுள்ள சாதியேற்பாட்டுக்கு ஆதாரம் வேதத்தில் இல்லை. தமது ஆயு ளனைத்தையும் ஸமஸ்கிருதம் படிப்பதில் செலவிடுதலையே முக்கியமாகக்கொண்டு இருக்குவேத முழுவதையும் சாயனாசாரியரது வியாக்கியானத்தோடு பதிப்பித்து வெளிப்படுத்தி உலக முழுதும்பெரும்பிரசித்திபெற்று விளங்கிய மாக்ஸ்முல்லரென்ற ஐரோப்பிய மஹாபண்டிதர் கூறியதன் கருத்துப்பின் வருவது:—
"பலவகைப் பட்டசாதிகளுக்கு வேதத்தில் எவ்வகை ஆதாரமும் ஒரு சிறிது மின்று. பல வேறு வகுப்புச் சனங்கள் தம்முள் ஒன்றுக உண்டு உடன் வாழ்வதற்குவிரோதமான எவ்விதியு மில்லை. வெவ்வேறுன சாதிகளைச் சார்ந்த ஜனங்கள் கல்யாண சம்பந்தஞ் செய்தலைத் தடுக்கும் விதியுங் கிடையாது. அவ்வகை மணத்தில் பிறந்த பிள்ளைகளை இழிவு படுத்தற் குரிய விதியு மில்லை. குருமார், தேவர்க்கே யுரிய வந்தனையைப் பெறுதற்காயினும், எந்தச் சாதி மனிதரும் மிருகங்களினும் கீழ்ப்பட்ட நிலைமைக்குத் தாழ்த்தி யிழிக்கப் படுதற் காயினும், அநுமதி யளிக்கும் விதியுங் கிடையாது."

பின் வருவது, ஸமஸ்கிருதத்தில் மகா பண்டிதராகிய டாக்டர் ஜி.பந்தர்க்கர் 1894ஸு, சென்னபட்டணத்தில், ஜனுசாரச் சீர்திருத்த விஷயமாகக் கூடிய கூட்டத்தார் முன்பு செய்த உபந்நியாச சாரம்:-சாதி முதலிய ஜனுசாரங்களின் "வரலாற்றை நன்ருகத் தெரிவதற்கு சமஸ்கிருத பாஷா நூல்கள் பூர்வந் தொடுத்து நாளது வரை யுள்ளவைகளைக் காலக்கிரம ரீதியாக் கவனிப்பது நலம். அவைகள் யாவற்றிலும் பழைமையானவை வேதங்க

ளில் மந்திர பாகங்கள்; அடுத்த முதுமையுடையவை பிராமணங்களும் உபநிஷதங்களை யுள்ளிட்ட ஆரணியங்களும். அடுத்த பாரம்பரிய முடையவை மஹாபாரத ராமாயணங்களாகிய இதிகாசங்கள்; கடைசியானவை தரும சாஸ்திரங்களும் புராணங்களும், இந்நூல்களின் பரப்பை நான் நோக்க உத்தேசிக்கும் முறை, கால வரிசை யென்பதொன்றுள்ள தென்னும் பிரஞ்ஞை யே யில்லாதவர்களாக வாவது, அந்தப் பிரஞ்ஞை இருந்தாலும் அவ்வரிசை முக்கிய மற்றதென்று கருதுகிறவர்களாக வாவது உள்ள பண்டிதர்கள் நோக்கும் முறையாக வில்லாமல் கால தேச வர்த்தமானுதிகளை நுட்பமாகக் கவனிப்பதா யுள்ளது. அதி பூர்வகாலத்தில் ஜாதி பேதம் இருந்ததில்லை. அது வேதகாலத்தின் அந்தத்தில் ஏற்பட்டதாகத் தோன்றுகின்றது. அது முதலில் மனிதர்கள் ஜீவனத்தின் பொருட்டுச் செய்த விருத்திகளின் பேதத்தினுல் உண்டாகத் தொடங்கியது. தகப்பனுயுள்ளா னொருவன் தான் பிழைப்புக்காகச் செய்து வந்த தொழிலையே தன் மகனும் பின்பற்ற வேண்டுமென்று விரும்புவது இயல்பு. இவ் விருப்பமே ஆரம்பத்தில் பிரத்தியேகமான ஜாதிகளுண்டாவதற்குக் காரணமா யிருந்தது. வேதத்தின் பூர்வமான பாகங்களில் பிராமணம் என்ற பதத்துக்குத் தெய்வத்துக்கு ஸ்தோத்திரமாகச் செய்யப்பட்ட சங்கீதப் பாடலென்பது பொருள். அவ் விதப்பாடல்கள் செய்தலிற் சமர்த்தராகச் சிலரிருந்தனர். அந்தப் பாட்டுக்களுக்குப் பிரதியாக, அவைகளாற் பாடல்பெற்ற தெய்வங்கள் ,பாடியவர்களுக்கும் அப்பாட்டுகள் எந்த அரசர் பொருட்டுப் பாடப்பட்டனவோ அந்த அரசர்களுக்கும், நற்பலனளிப்பதாக நம்பிக்கையிருந்தது. எந்தத்தெய்வத்தையாவது பிரீதிப்படுத்தும்படி நேர்ந்த போதெல்லாம் அப்பாட்டுக்காரர் வேண்டியவர்களாயினுர்கள். அவர்கள் விருத்தியும் லாபகரமானதா யிற்று. ஆகவே அவருள் பிதாக்கள் புத்திரரை அவ்விருத்தியிலே பழகச் செய்தனர். அதனுல் காலக்கிரமத்தில், சிலகுடும்பஸ்தர்கள் அப் பாட்டுக்களைச் செய்வதும் தெய்வங்களை வணங்குங் காலத்தில்

அவைகளுக்கானமுறையாகப் பாடுவதுமே தொழிலாகக் கொண்டனர். அப்படிப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பிராமணர் என்று அழைக்கப்பட்டு ஒரு பிரத்தியேகமான ஜாதி யாயினர். இவ்வாறே அரசர்கள் படைத்தலைவர்கள் படைவீரர்கள் ஆகிய இவர்களின் சந்ததியாரும் தத்தம் முன்னோர் விருத்திகளை அப்பியசித்து வேறோர் பிரத்தியேகமான க்ஷத்திரிய ஜாதியானார்கள். கிருஷித்தொழில் செய்வோர் வைசியராயினர். ஆரியர்கள்பஞ்சாப்பினின்று நீங்கி வட இந்தியாவில் சென்று பரவிய காலத்தில் சில பூர்வ குடிகள் அவர்கள் இனத்தோடு கலந்து சூத்திரஜாதியாயினர். இவ்வாறாக நான்கு ஜாதிகளிருந்தன. ஆனாலும் ஆரம்பத்தில் அச்சாதிகளைப்பற்றிய விதிகள் பின்காலத்திலானதுபோல அவ்வளவு கடினமாகி விடவில்லை. வேதகாலம் உபநிஷத்காலம் இவைகளுக்குப் பிந்திய இதிகாச காலத்திலும் கூடப் பிராமணர் க்ஷத்திரியரோடும் வைசியரோடும் போசனஞ் செய்திருக்கின்றார்கள். முநிவர்கள் திரௌபதியால் விருந்து செய்யப் பெற்றதை யறியாதார் யார்? உயர் வருணத்தார் தாழ்குலத்து மாதரை மணஞ் செய்தல் சகசமா யிருந்தது. தாழ் குலத்தார் உயர் குலத்துப் பெண்களை மணத்தலும் வழங்கா திருக்க வில்லை. வேத கீத கர்த்தாக்களுள் காவலர், அயிலுஷர் போலப் பிராமண ரல்லாதார் அநேகருளர். ஜாதி இப்போது எப்படியா யிருக்கிறதென்பது சொல்ல வேண்டுமோ? நாலு ஜாதியு மிப்போது நாலாயிரஞ் ஜாதிகளா யிருக்கின்றன வென்று சொல்லலாம்".

மேலே கூறியபடி தற்கால சாதியேற் பாட்டுக்கு ஆதாரம் ஆரியநூல்களுள் மநு ஸ்மிருதியும் புராணங்களும் இவற்றுக்குப் பின் உண்டாகிய நூல்களுமே. முந்திய நூல்களுள் சாதிகளைப் பற்றிச் சில விடங்களிற் கூறியிருந்தாலும் அப்படிக் கூறிய சாதிகள் மற்றைய தேசத்திலுள்ளவை போலத் தொழில் பற்றிய சாதிகளே யன்றி இப்போது இந்தியாவில் மட்டுமே யுள்ள பிறப்பொன்றே காரணமான சாதிக ளல்ல. இப்போதைய சாதி வழக்

கங்கள் மநுஸ்மிருதியையும் புராணங்களையும் பின்னிடச் செய்து விட்டன. இந் நூல்கள் ஒரு சாதியின்உள் வகுப்புகள் ஒன்றோ டொன்று பெண் கொண்டு கொடுப்பதையும் அவ்வச் சாதி அதன் "கீழ்ச் சாதி" மாதரை மணப்பதையும் விலக்க வில்லை. இப் போதைய சாதிவழக்கங்களோ அவ்வகை மணங்களைத் தவிர்த்து விட்டன.இப்போது பார்ப்பான் வேளாளன் பெண்ணைக் கொள்ள விரும்பினாலும் வேளாளன் அதற்கு இசையான். 'தாழ்ந்த' சாதியார் உயர்ந்த சாதியார் அளிக்கும் உணவை யேற்றுண்பார் களே யன்றி (பெண்கொள்ளல் கொடுத்தலாகிய) சம்பந்தஞ் செய்யச் சம்மதியார். "உயர்ந்த" சாதியாரிடத்து "தாழ்ந்த" சாதியார் உணவேற் றுண்பது நிரந்தர மாக வில்லை. "சிங்கு", "வீரசைவர்" முதலிய சில சாதியார் பிராமணர் சமைத்த உணவையும் புசியார்; தத்த மினத்தா ரகத்து மட்டுமே போசனஞ் செய்வர்.

முடிவுரை.

தற்கால ஜாதி யேற்பாட்டுக்கு ஆதாரம் மநு ஸ்மிருதியும் புராணங்களுமென்று முன் அதிகாரங்களிற் சொன்னேன். இந்த நூல்கள் பிராமணருக் கனுகூலமாகப் பிராமணராற் செய்யப் பட்டவை. இந்நூல்கள் தாமியற்றப் பட்டகாலத்தில் உள்ள சாதி யாசாரங்களைக் கூற வில்லை; சாதி யாசாரங்கள் இப்படி இருந்தால் பிராமணருக் கனுகூலமா யிருக்கு மென்று கருதியவற்றை விதிகளாக விதிக்கின்றன. இவ் விதிகள் எக் காலத்திலும் பூரணமாக அனுஷ்டானத்துக்குக் கொண்டு வரப்பட்டிருத்தல் அசம்பாவிதமென்பது பின் வரும் விதிகளால் விளங்கும்:—

பிராமணனுக்குத் தலையை முண்டிதஞ் செய்வது கொலைத் தண்ட மாகும். மற்ற வருணத்தாருக்குக் கொலைத் தண்டமுண்டு. மனு அத். XI, 379.

அந்தணன் பூனை, அணில், காடை, தவளை, நாய், உடும்பு, கோட்டான், காகம் இவைகளைக் கொன்றால் ஒரு சூத்திரனைக் கொன்றதற்குச் செய்ய வேண்டிய பிராயச்சித்தம் செய்ய வேண்டும். மனு அத். IX, 132.

வைதீக கருமமா யிருந்தாலும் லௌகீக கருமமா யிருந்தாலும் அக்கினி எப்படி மேலான தெய்வமா யிருக்கிறதோ, அப்படியே பிராமணன் ஞானியாயிருந்தாலும் மூடனா யிருந்தாலும் அவனே மேலான தெய்வமாவான். மனு அத். VI, 317.

பிராமணன் துர்ச் செய்கை யுள்ளவனா யிருந்த போதிலும் சகலமான சுபாசுபங்களிலும் பூசிக்கத் தக்கவன்; அவன் மேலான தெய்வ மாதலால். மனு. அத். VII, 318—19.

கருமா னுஷ்டான மில்லாத பிராமணனேனும் அவன் அரசன் செய்ய வேண்டிய தீர்ப்புகளைச் செய்யலாம். சூத்திரன் ஒருபோதுஞ் செய்யக்கூடாது. மனு. அத். VIII, 20.

சூத்திரன் விலை கொடுத்து அடிமையாக வாங்கப்பட்டிருந்தாலும் இல்லா விட்டாலும் அவனை பிராமணன் நிர்ப்பந்தப் படுத்தி வேலை வாங்கலாம். ஏனென்றால் கடவுள் சூத்திரனை பிராமணனுக்கு வேலை செய்யும் ஒரே நிமித்தமாகவே படைத்திருக்கிறார். மனு. அத். VIII, 413.

பிராமணன் சூத்திர னுடைய பொருளை முழு மனச் சமாதானத்துடன் (சற்றாயினும் பாவ மென் றெண்ணாமல்) கைப்பற்றிக் கொள்ளலாம்; ஏனெனில் அவனுக்குச் சொந்தமான தொன்று மில்லை யாதலாலும், அவன் சொத்தை அவன் எஜமானன் எடுத்துக் கொள்ளலா மாதலாலும். மனு. அத். VIII, 417.

ஒரு பிறப்பாளன் (சூத்திரன்) இரு பிறப்பாளனைத் திட்டினால் அவன்நாவை யறுத் தெறிய வேண்டும். மனு. அத். VIII, 270.

அவன் அவர்கள் பேரையாவது சாதியையாவது தூஷித்தால் பத்து விரல் நீளமுள்ள பழுக்கக் காய்ச்சிய இரும்பை அவன் வாய்க்குள் செலுத்த வேண்டும். மனு. அத். VIII, 271.

அவன் அகந்தையினால் குருமாருக்கு அவர்களுடைய கடமைகளைப் பற்றிப் போதிப்பானானால் அவன் வாய்க்குள்ளும் காதுகளுக் குள்ளும் கொதிக்கிற எண்ணெயை ஊற்றும்படி செய்வது அரசன் கடமை. மனு. அத். VII. 272.

அவன் உயர் குலத்தானை (அடிப்பதற்கு) கையை யாவது தடியை யாவது உயர்த்தினால் அவன் கையை வெட்டி யெறிந்து விடவேண்டும். அவன் கோபத்தினால் அவனை உதைத்தால் அவன் காலை வெட்டி யெறிந்துவிட வேண்டும். மனு. அத். VIII, 280.

தாழ் குலத்தான் உயர் குலத்தானோடு சமமாக வுட்கார வெத்தனித்தால் அவனை இடுப்பிற் சூட்டுக்கோல் கொண்டு சுட்டுத் தேசத்தை விட்டுத் துரத்திவிட வேண்டும். அவன் பின் பக்கத்தை வெட்டி யெறிந்து விடலாம். மனு. அத். VIII, 281.

அவன் அகந்தையால் அவன் மேல் உமிழ்ந்தால் அவன் உதடுக ளிரண்டையும் அரசன் வெட்டி யெறியும்படி செய்ய வேண்டும். மனு. அத். VIII, 282.

இத்தகைய அறப் பெருங் கொடிய அநியாய விதிக ளடங்கிய மனு நூலாதி ஆரிய நீதி நூல்களையும், "பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் சிறப் பொவ்வா— செய் தொழில் வேற்றுமையால்" என்பது போன்ற சகல தேசத்தார்க்கும் சகல காலத்தார்க்கும் ஒப்பக் கூறிய நீதிக ளடங்கிய திருக்குறள் ஆதி திராவிட நீதி நூல்களையும் ஒப்பிட்டு நோக்கினால், ஆரியர் தர்ம சிந்தனைகளுக்கும் திராவிடர் தர்ம சிந்தனைகளுக்கும் உள்ள வித்தியாசம் விளங்கும். இது நீதி, இது அநீதி யென்று பகுத்தறியும் வன்மையில்லாமையுடன் "வானிடிந்து விழுந்திடுமாயினும் நீதி செலுத்தப் படுவதாக" என்னும் கொள்கை யுடையாரா யிருந்த நிர்மூடராசர் சிலரால் மேற் கூறிய மனு நூல் விதிகளுள் ஒன்றிரண்டு ஏகதேச மாக ஒருகால் நிறைவேற்றப்பட் டிருப்பது கூடுமாயினும், நியதியாக இவ்விதிகள் நடை பெற் றிருத்தல் அசாத்தியம். மனு ஸ்மிருதி இந்து சன சமூகத்துக்கு நால்வகைச் சாதியாசாரங்களை விதிப்பது போலவே, அச்சன சமூகத்தி லடங்கிய துவிசருள் ஒவ்வொரு மனிதனுக்கும் நால்வகை ஆசிரம நெறிகளை விதித் திருக்கின்றது. அவ்வாசிரம நெறிகளின் முறையாதெனின்:— ஒருவன் பிரமச்சரிய விரதத்தை யனுஷ்டித்து நிறைவேற்றியதன் பின் கிருகஸ்தனாகி இல்லறத்தை நடத்தி, அதன்பின் மனைவியோடு வனஞ்சென்று தவம் புரியும் வானப்பிரஸ்தனாகி, அதன்பின் மனைவியோடு மற்றைப் பற்றுகள் அனைத்தையும் துறந்து சந்நியாசி யாக வேண்டு மென்பது. இம்முறையை அனுசரியாமல் முதல் முதலே சந்நியாசிக ளாயினோர் இக்காலத்திற் போலவே முற்காலத்தும் உண்டு. இது போலவே "கீழ்ச்சாதி" மனிதர் சிலர் இருஷிகளாகி "மேற் சாதி" பிராமணராகி யிருக்கின்றனர்.

சாதி வித்தியாசம் நியாயமானதென்று வாதிப்போர், சாதி வித்தியாசம் இந்தியாவில் மட்டும் அல்ல, அது அதியுத்கிருஷ்ட நாகரீக மடைந்திருக்கிற இங்கிலாந்திலுமே யிருக்கிறது; அங்கே பிரபுகுலத்தான் எவனும் சாதாரண குடியானவனுடைய பெண்

ணைக் கொள்ளச் சம்மதியான். இது சாதிவித்தியாச மன்றி வேறு யாது?'' என்கின்றனர். இங்கிலாந்தில் பிரபு குலத்தான் குடியானவனது பெண்ணைக் கொள்வது அபூர்வமே; ஆனால் அங்கே குடியானவன் பிரபுவாய் விடவும், பிரபுவின் பெண்ணைக் கொள்ளவுஞ் செய்கிறான். அத்தேசத்தில் பெருங்கௌரவமும் அதிகாரமும் உள்ள லார்ட் சான்ஸெல்லர் பதவியடைந்தோருள், அம்பட்டன் மகனுமுண்டு. இந்தியாவிலோ பிராமணன், என்றும்,பிராமணனே; பறையன், என்றும், பறையனே. பறையன் எவ்வளவு கல்வியும் ஒழுக்கமும் உள்ளோனாயினும், எத்தனை செல்வனாயினும், ராசாதிராசனாகிவிடினும், பள்ளனாகவுங் கூட முடியாது!

எந்தப் பிரதேசத்தில் கீழ்ஜாதிஜனங்கள் மிக இழிவாக நடத்தப்படுகிறார்களோ, அந்தப் பிரதேசங்களிலே கிறிஸ்து மதத்தில் பிரவேசிப்போர் தொகை யதிகமாக விருக்கிறது. ஹிந்து மதத்தில் உள்ள பறையர் போன்ற "கீழ்ச்சாதி" மனிதர்களைப் பிராமணர் தங்கள் தெருவூடு செல்லவும் இடங் கொடுப்பதில்லை. அக்கீழ்ச்சாதி மனிதரே கிறிஸ்தவராக வாவது மகமதியராக வாவது ஆகிவிட்டால் அவர்களைத் தெருவிடை நடத்தலே யன்றித் திண்ணையில் சமமாக விருத்தற்கும் இடங் கொடுக்கின்றனர். இவ்வாறு செய்வது 'கீழ்ச்சாதி ஹிந்துக்களே! நீங்களேன் மதியிலிகளாய் எங்கள் மதத்திலிருந்து இழிக்கப்படுகிறீர்கள்? கிறிஸ்தவரல்லது மகம்மதிய ராய்விடுங்கள் அப்போதுதான் நாங்கள் உங்களை மேன்மையாக நடத்துவோம்'' என்பது போலவிருக்கின்றது மன்றி, 'எங்களது மதத்தில் நீங்கள் பரம்பரை பரம்பரையாகப் பல நூற்றாண்டுகளாக விருக்கின்றீராயினும் எங்கள் மதம் உங்களைப் பரிசுத்தப்படுத்தும் வன்மையில்லாதது. கிறிஸ்து மதம் அல்லது மகம்மதிய மதத்திற் பிரவேசியுங்கள்; பிரவேசித்த மாத்திரமே அவை உங்களைப் புனிதப் படுத்திவிடும், என்பதுபோலவும் இருக்கின்றது.

பிராமணருள்ளேயே சாதி விஷயமாகச் சற்றேறக்குறைய யான் கூறிய கொள்கைகளை யுடையார் பலருளர். அத்தகை

யோருள் முன் "ஹிந்து" பத்திரிகைக்கும் இப்போது "சுதேசமித்திரன்" பத்திரிகைக்கும் பத்திராசிரியராகிய ஸ்ரீ ஜீ. சுப்ரமணிய ஐயரும், ஓர் உயர்ந்த ஆங்கில வித்தியாசாலைப் பிரதம போதகாசிரியராகிய டாக்டர் பந்தர்க்காரும், காலஞ்சென்ற பாம்பை ஹைகோர்ட்டு நீதிபதி ரானடேயும் சேர்ந்தவர்கள். "உண்மையினுமுயர்ந்த மத மொன்று மில்லை." "திரிலோகாதிபத்தியத்தையும் கைலாய வைகுந்தாதி பதவிகளையும் இவையாவற்றினுஞ் சிறந்த தெதனையும் துறப்பே மாயினும் உண்மையை ஒருகாலுந் துறவேம்". "மண் மணத்தைத் துறப்பினும், காற்று இயக்கத்தைத் துறப்பினும், நீர் ஈரத்தையும் நெருப்பு வெம்மையையும் துறப்பினும் யாம் உண்மையைத்துறவேம்". "உண்மை நரகுக்கே செலுத்துமாயினும் செலுத்துக, அதனையே பின்பற்றி யொழுகுவேம்" என்ற உறுதிக்கொள்கைகளையுடைய யதார்த்த வாதிகள் எக்குலத்தவராயினும், சாதி வித்தியாசம் அக்கிரமமும் அநியாயமுமான கட்டுப்பாடு என்பதையும், சுய நலம் பாராட்டிய சில வகுப்பாரது சிருஷ்டியே என்பதையும் ஒப்புக் கொள்வர்.

பின்னுரை.

ஸ்ரீ சுந்தரம்பிள்ளையுடைய கொள்கைகள் ஸ்ரீ பண்டிதர் சவரிராயர் முதலிய சில பழஞ் சரித்திர வாணர் கொள்கைகளோடு சிறிது மாறுபடுவனவாகத் தோன்றுகின்றன. ஆயினும், அம்மாறுபாட்டினால் "நாற்குலச்சாதி இந்நாட்டில் நீர்நாட்டினீர்" என்று கபிலர் பிராமணரை நோக்கிக் கூறியபடி, "சாதி வித்தியாசம் இந்தியாவில் ஆரியரால் நாட்டப்பட்டதே யன்றித் தொன்றுதொட்டு உள்ளதன்று" என்ற விஷயம் பாதிக்கப்பட வில்லை. புரோபஸர் சுந்தரம் பிள்ளை இராமாயண கதை வால்மீகரால் ஆக்கப்பட்டதென்றும் அதில் வரும் இராமலக்குமணதியர் உண்மையாக உயிரோடிருந்தவர்க ளல்லராயினும் சீவித்திருந்தாற்போலக் கூறப்பட்டிருக்கிறு ரென்றுங்கூறினார். பண்டிதர் சவரிராயர் அக்கதை திராவிட பூர்வகதை யென்கின்றனர். இவ்விருகொள்கை

களும் ஒன்றோடொன்று முரணுவனவாகத் தோன்றினும் உண்மையில் விரோத முடையன வாயிருத்தல் அவசிய மில்லை. திராவிட பூர்வகதையை வான்மீகி தமக்கிசைந்தபடி உபயோகப் படுத்தி அக்கதா வீரரை ஆரிய வீரராக மாற்றி, அவரது பிரதாபங்களைத் தஞ்சாதி வீரர் மேலேற்றி மற்றும் ஆரியருக்கு அநுகூலமாக வேண்டியபடி விகற்பித்துக் கூறி யிருக்கலாம். இது, அவர், ஆரியர் மாத்திரம் தவஞ் செய்யலாமே யன்றிச் சூத்திரர் தவஞ் செய்தல் தகா தென்றும், அதற்கு மாறாக ஒரு சூத்திரன் தவஞ் செய்த குற்றத்துக்காக இராமன் (வேறு குறைந்த தண்டனை யெதுவும் போதா தென்று) கொலையே செய்தா னென்றும், "கரியமாலினுங் கண்ணுதலானினும் - உரியதாமரைமேலுறைவானினும் - விரியும் பூதமோரைந்தினும் மெய்யினும் — பெரியரந்தணர் பேணுதி யுள்ளத்தால்" என்று இராமனுக்குக் வசிஷ்டர் நன்மதி புகட்டினாரென்றுங் கூறியதனாலும், பிராமணர் பக்கமாகக் கூறிய பிறவற்றாலும் விளங்கும்.

ஸ்ரீ சுந்தரம் பிள்ளை அவையடக்கமாகக் கூறிய முகவுரையில் திராவிடர் ஆரியரது மதத்தைப் பின்பற்றின ரென்று இடைப்பிறவரலாகக் கூறியதற்கு முற்றும் மாறாகப், பண்டித சவரிராயர் பூர்வத்தில் ஆரியர் வடதேசத்தினின்று தெற்கே வந்து, ஆதி தத்துவ ஞானோதய சூரியராக விளங்கிய திராவிட முனி புங்கவர்களுக்குச் சீடராய் அவர்கள் பால் தத்துவ நூல்களும் மதநூல்களும் கற்றுக் கொண்டன ரென்று பல நியாயங்களெடுத்துக்கூறி, "திராவிட ஆரியக் கலவை" (The Admixture of Aryan with Tamilian) என்ற சிறந்த வியாசத்தின்கண், வற்புறுத்துகின்றனர். தென்னிந்திய சாதி வரலாற்றில் இது போன்ற விவாதத்திற் கிடமான கொள்கைகள் வேறு சிலவு மிருக்கலாம். ஆயினும், அவைகளால் சாதி பிராமண சிருஷ்டி யென்ற பிரதான விஷயம் பலங் குன்ற மாட்டாது.

முற்றும்.

[பிரகடனம்.]

ஸ்ரீ. வெ. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. சி.

இயற்றிய நூல்கள்.

1. சுவர்க்கநீக்கம் முதற்காண்டம்.

"பாரடைஸ் லாஸ்டு" என்னும் இங்கிலிஷ் காவியத்திலிருந்து விருத்தப்பாவில் மொழிபெயர்த்து, மிலிட்டனுர் சரித்திரம் சுவர்க்க நீக்கக் கதை, சுவர்க்கநீக்க முதற்காண்ட வசனம் சுவர்க்க நீக்கப் பொது வியாக்கியானங்கள் ஷை முதற்காண்டச் சிறப்பு வியாக்கியானங்கள் அரும்பதவிளக்கம் இவைகளுடன் பதிப்பித்தது.

ராயபஹதூர் சி. வி. தாமோதரம்பிள்ளையவர்களால் சிறப்புப் பாயிரம் அளிக்கப்பெற்றது.

பாடபுஸ்தக கமிட்டியாரால்(Text Book Committee) தெரிந்தெடுத்துச் சிபாரிசு செய்யப்பட்டு வித்தியா இலாகாத்தலைவரால் (Director of Public Instruction) ஹைஸ்கூல்களில் ஐந்தாவது ஆறுவது வகுப்புகளில் உபயோகிக்கத் தக்கதென்று அங்கீகரிக்கப்பெற்றது.

(200-க்கு அதிகமான பக்கங்கள் உள்ளது)

விலை திண்மையான அட்டையுடன் ரூ 0-12-0.

காலிகோ கட்டடம் சுவர்ண எழுத்துக்களுடன் ரூ. 1-4-0

சில பண்டித சிரேஷ்டர்களின் அபிப்பிராயசாரம்.

ம-௱-௱-ஸ்ரீ, மஹாமஹோபாத்யாயர் வே. சாமிநாதையரவர்கள்:— இதில் உள்ள செய்யுள் நடையும் வசனநடையும் நிரம்ப நன்ருக இருக்கின்றன. இந்நூல் வேருெரு பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டிருந்தும், படிக்குங் காலத்தில் அவ்வாறு தோன்ருமல் நடை விசேடத்தால் நூதனமாகச் செய்யப்பட்ட மூலநூல்போல விளங்கிப் பொருளை வருத்தமின்றி நன்கு புலப்படுத்துகின்றது.

"கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச், செல்வப் புதல்வனே யீர்ங்கவி" என்று ஆன்ருேர் கூறிய வண்ணம் இந்நூல் முதலியாரவர்களுடைய இலக்கிய இலக்கணப் பயிற்சிக்குத் தக்கவாறே அமைந்ததென்று சொல்லலாம்.

டாக்டர். ஜி. யூ. போப்பையாவர்கள்:— (இங்கிலிஷிலிருந்து மொழி பெயர்த்து) இந்நூலின் முதற்பகுதி முற்றுப் பெற்றிருக்குந்தன்மையைப் பற்றி மனப்பூர்வமான துதிமொழியன்றி வேருென்றும் கூறவிடமில்லை. இம்மொழிபெயர்ப்பை அதிநுட்ப

மாக கவனஞ்செலுத்தி ஆராய்ச்சி செய்த யாம், மொழிபெயர்த்தவர் மூலப்பெருங்கிரந்தத்துக்கிணங்க முட்டுப்பாடின்றி யொழுகும் இனிய தமிழ்க்கவிகளமைத்ததில், மிக அதிகமான— மெய்யாகவே ஆச்சரியகரமான— சித்தியடைந்திருக்கிறரென்று கூறக்கடவேம்.

[பின்னும் ஷெயார் தமது திருவாசக ஆங்கிலமொழிபெயர்ப்புப் பெருங்கிரந்தத்தின் முகவுரையில் இந்நூலை நன்கு மதித்து கூறியிருக்கின்றனர்.]

கனம். வாக்கையரவர்கள். M.A., C. M. S.—இதன் (சுவர்க்க நீக்கத்தின்) சிறப்பைப் பற்றி நான் பலராலும் அறிந்திருக்கிறேன் ....வசனபாகங்களின் நடையழகுக்கே இப்புஸ்தகம் யாவரும் வாங்கி வாசிக்கத்தக்கது......இம்மொழி பெயர்ப்பு, உண்மைக் கவிக்குரிய லக்ஷணங்களை உடைத்தாயிருப்பதனேடு மூலநூற் கருத்தை உள்ளபடியே வெளியிடுகிறதனுல், ஆதரிக்கத் தக்கதென்று முழுமனத்துடன் கூறுகின்றேன்.

II. கோம்பிவிருத்தம்.

ம-ா-ா-ஸ்ரீ மஹாமஹோபாத்யாயர் வே. சாமிநாதையரவர்களால் சிறப்புப்பாயிரம் அளிக்கப்பெற்றது விலை அணு 4.

ம-ா-ா-ஸ்ரீ ராயபகஹ்தூர் சி.வி.தாமோதரம்பிள்ளையவர்கள்:—(இங்கிலிஷிலிருந்து மொழிபெயர்த்தது) கோம்பிவிருத்தம் என் மனதுக்கு விருந்தாகியது ....கோம்பிவிருத்தத்தின் நடைமிகவும் மனேகரமானது. அதன் உரை அதனை வாசிக்கும் பண்டிதரும் வித்தியார்த்திகளும் ஒரு நிகராக இன்பம் அனுபவிக்கும்படி உதவுகின்றது.

III. நெல்லைச்சிலேடை வெண்பா.

இதுவும் ஷை மஹாமஹோபாத்தியாயரவர்கள் சிறப்புப்பாயிரம் பெற்றது இதன் விலை 0-2-0.

விவேகபாநு:— திரிபும் சிலேடையும் செம்பாகமாகவே அமைக்கப் பெற்றிருத்தலால் சிறிது ஊன்றிநோக்கில் பொருள் காண்டல் எளிதே. பொருள் புலப்பட்டவுடன் மனத்து எழும் பெருமகிழ்ச்சிக்கு வரம்பு காண்டலரிதாம். நெல்லை என்னும் சொல்லை ஆசாகவைத்து நூறு சிலேடை கூறுதல் மிகக் கொண்டாடற்பாற்று. செய்யுளியற்றும் வன்மையுடையார் இதன்திறங் கண்டு பிரமிப்பது திண்ணம் இதற்கு உரையும் இருக்கின்றது.

IV. இந்துதேசத்துக்கால்நடைக்காரர் புஸ்தகம்.

(இங்கிலீஷிலிருந்து மொழிபெயர்த்தது) விலை ரூ. 2—0—0 (புஸ்தகம் கைவிருப்பில்லை)

V. இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகிற அதிக பிராணுபாயமான வியாதிகளைப்பற்றிய புஸ்தகம்.

இங்கிலீஷிலிருந்து மொழி பெயர்த்து கவர்ன்மென்ருரால் பிரசுரிக்கப்பட்டது. சென்னைக் கவர்ன்மென்று அச்சுக்கூடம் சூப்பிரண்டெண்டுக்கெழுதி வாங்கிக்கொள்ளலாம். விலை அணு 3.

VI. கல்விவிளக்கம் முதற்பாகம்.

ஷை வெ. பி. சுப்ரமணியமுதலியார், ஸ்ரீ S. V. கள்ளபிரான் பிள்ளையவர்கள் B. A., ஸ்ரீ அப்பாவு பிள்ளையவர்கள் L. M. & S. என்பவர்கள் சேர்ந்து இங்கிலீஷிலிருந்து மொழி பெயர்த்தது.

விலை ரூ. 1—0—0

மேற்குறித்த புஸ்தகங்களுல் IV. V. லக்கமிட்ட புஸ்தகங்கள் தவிர மற்றெல்லாப் புஸ்தகங்களையும் சென்னை ரிப்பன் அச்சுக்கூடத்துச் சொந்தக்காரரிடத்திலும், மதுரைப் புதுமண்டபம் புஸ்தகக் கடை ஸ்ரீஇராமகுருசாமிக்கோனரிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

WORKS BY

Mr. V. P. Subramania Mudaliar, G. B. V. C.

1.—A Tamil translation of Paradise Lost, Book I in Viruttam metre.

With a prose rendering of the same, a life of Milton, the main story of Paradise Lost, and copious commentaries and notes in Tamil.

(With a metrical introduction in Tamil by Rao Bahadur C. W. Tamotharam Pillai Avergal, B. A., B. L.)

Recommended by the Text Book Committee and approved by the Director of Public Instruction for use in classes V and VI in High Schools.

(Containing more than 200 pages)

In thick board As. 12. In full cloth with gilt letters Rs. 1—4—0.

Extract from select opinions.

Rev. Dr. G. U. Pope —We have no words but of hearty commendation for the way in which the first Instalment of the work has been completed...... We feel bound to say, after an exceedingly minute and careful study of the lines, that the translator has succeeded to a very great—indeed a surprising—degree.........the writer's prose Tamil style is remarkably good.

(The Rev. Dr. again appreciatively refers to this work in the introduction to his monumental translation of Tiruvasakam.)

Rev. T. Walker, M. A,,C. M., S. I had heard of its excellance from several sources......... I can recommend your rendering most heartily as being both true poetry and a faithful representation of the orginal.

Mahamahobhadyaya Mr. V. Saminathier.--(Translated). The style of the poetical as well as the prose section is exellent. The work, though a translation, is so composed that it reads easy and clear like an original work in Tamil. It may be said to be a production worthy of the author's proficiency in grammar and literature of the Tamil language.

II.—Kombi Viruttam.

With an introduction by Mahamahobhadyaya Mr. V. Swaminathier.

Price 4 As.

Extracts from select opinions.

Rao Bahadur Mr. C. W. Tamotharam Pillai, B. A., B. L.—Your Kombi Viruttam was really a mental feast to me......... The style also is very charming. Your notes adopt the book to be read by all, the learned and the student with equal interest.

Mr. E. S. M. Senathi Raja, LL. B., Barrister-at-law, M. R. A. S. &c.— I must congratulate you on adding to modern Tamil literature a work not unworthy of classical times.

Mr. K. C. B. Kumarakula Singh Mudaliar, Tamil interpreter to H. E the Governor of Ceylon.— It compares favourably, in sweetness and sentiments, with similar works of recognised merit in our extensive Tamil literature while it bears many marks of originality. The purity of diction has struck me specially as worthly of commendation.

III.—Nellaichiledaivenba.

(An Original poem in Tamil with notes.)

Price 2 As.

IV.—A Tamil translation of Col. Mill's Indian Stock owners' Manual (not in stock, Price 2 Rs.)

V.—A Tamil translation of "The More Dealy Forms of Cattle Diseases in India." (Published by Government and may be obtained from Government Press, Madras.)

VI.— A Tamil translation of Herbert Spencer's Education, Part I, (containing the first two chapters) by the same author jointly with Messrs. S.V. Kallapiran Pillay B.A. and C.Appavu Pillai, L.M.& S. Price Re. 1.

All the above books except IV and V can be had of the Proprietor, Ripon Press, Madras, and Mr. Rama Gurusami Konar, Book Shop, Pudu Mantapam, Madura.